S. M. Fernando
OPTICIANS
SIGHT TESTED
PRESCRIPTIONS
ACCURATELY
DISPENSED
580, HOSPITAL ROAD,
[Near Bank of Ceylon]
JAFFNA.

பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை
ரூ 2/50

கண்வைத்திய நிபுணர்கள்
சிபார்சு செய்யும்
கண்ணாடிகளை
சரியாக கொடுப்பவர்கள்
எஸ்.எம். பெர்னாண்டோ
580, ஆஸ்பத்திரி வீதி,
(இலங்கை வங்கி
அருகாமையில்)
யாழ்ப்பாணம்.

சுடர்: 4 சுக்கில ஒளி ஆவணி மீ 22 உ வியாழக்கிழமை ஹிஜ்ரி 1410 ஸபர் பிறை 6 (07 : 09 : 1989) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்: 237

## அரசாங்கத்துறையுடன்

# தனியார் துறையும்

# கட்டாய சேவை!

## அவசரகாலச் சட்டத்தின் கீழ் பிரகடனப்படுத்த ஏற்பாடு

கொழும்பு, செப்டம்பர் 7

அரசாங்கத்தின் கீழ் வரும் அத்தியாவசிய சேவைத்துறைகளுடன் சேர்த்து, தனியார் துறையும் கட்டாய சேவை ஆக்கப்பட்டுள்ளது.

அவசரகாலச்சட்டத்தின்கீழ் பிரகடனப்படுத்தப்படும் விசேட கட்டாய சேவைசட்டவிதிகளில் ஜனாதிபதி ஆர் பிரேமதாஸா நேற்றுக் கையெழுத்திட ஏற்பாடாகி இருந்தது.

புதிய சட்டவிதிகளின்படி தனியார் துறையில் உள்ள குறிப்பிட்ட சேவைகள் கட்டாய சேவைகளாக அறிவிக்கப்படும். இந்தச் சேவைகளில் பணிபுரிவோர் வேலைக்குச் செல்ல மறுத்தால் புதிய சட்ட விதிகளின்படி கடும் நடவடிக்கை எடுக்க வகை செய்யப்பட்டுள்ளது.

வேலை நிறுத்தம், ஹர்த்தால் என்பவற்றின் மூலம் அரசாங்கத்தைச் செயல் இழக்கச் செய்யும் முயற்சியில் தென்னிலங்கைத் தீவிரவாதிகள் ஈடுபட்டுள்ளது தெரிந்ததே.

அதன் பொருட்டு அவர்கள் அரச ஊழியர்களை வேலைக்குச் செல்லவிடாது தடுத்து வருகிறார்கள்.

அதேபோல தனியார் வர்த்தக நிலையங்கள் உட்பட தனியார் துறையும் பாதிக்கப்பட்டிருந்தது.

அரசாங்கத் துறை பாதிக்கப்படாமல் இருப்பதற்காக அரசாங்கம் பல அரச சேவைகளை அத்தியாவசிய சேவைகளாகப் பிரகடனப்படுத்தியது. சம்பந்தப்பட்ட துறைகளைச் சேர்ந்த ஊழியர்கள் கடமைக்குச் சமுகமளிக்காவிடில் கடும் நடவடிக்கை எடுக்க வகை செய்யப்பட்டுள்ளது.

அதே வகையில் மக்களுக்கு முக்கிய சேவைகளைப் புரியும் பல தனியார் துறைகளையும் அத்தியாவசிய சேவைகளாகப் பிரகடனம்செய்ய அரசு முடிவு

(6 ஆம் பக்கம் பார்க்க)

## நெடுந்தீவில் நேற்று சுற்றி வளைத்துத் தேடுதல்!

யாழ்ப்பாணம், செப்: 7

நெடுந்தீவுப் பகுதி நேற்று சுற்றி வளைக்கப்பட்டு தீவிர தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

நேற்றுக் காலை ஐந்துக்கும் மேற்பட்ட ஹெலிக்கொப்டர்களில் சென்ற படையினர் பரந்த வெளிகளில் இறங்கி நெடுந்தீவுப் பகுதியைச் சுற்றி வளைத்துக் கொண்டனர்.

சுற்றி வளைப்புக் காரணமாக குறிகாட்டுவான் - நயினாதீவுப்

(6ஆம் பக்கம் பார்க்க)

## அரசியலமைப்பைத் திருத்துவதால் பாரிய விளைவுகள் ஏற்படும்

### ஈ. எல். ஜே. பி. அறிக்கை எச்சரிக்கிறது

கொழும்பு, செப்: 7

வன்செயலை ஆதரிப்பவர்கள் எல்லாம் இன்று பிரதம நடிகர்களாக மேடையில் தோன்றியுள்ளனர். இத்தருணத்தில் அரசியல் அமைப்பைத் திருத்தும் முயற்சியில் ஈடுபடுவது பாரிய விளைவுகளை ஏற்படுத்தும்; தவறாகவும் முடியும்.

எக்ஸத் லங்கா ஜனதா பக்ஷய (ஈ.எல்.ஜே.பி.) நேற்று முன்தினம் விடுத்த அறிக்கை ஒன்றில் முன்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

குழப்பமான இன்றைய நிலையிலும் நாம் தங்கியிருப்பது இந்த அரசியல் யாப்பில். இப்போது தோன்றியுள்ள நடிகர்கள் அரசியல் அமைப்பைத் திருத்துவதற்கு தூண்டுவதால் புதிய சம்பிரதாயம் ஒன்றை ஏற்படுத்துவதற்கு முயற்சிக்கின்றனர். இது இறுதியில் பெரிய பூதம் ஒன்றை உருவாக்குவதில்தான் முடியும்.

தற்போதைய ஜனாதிபதி அரசமைப்பு முறையை எம்மில் சிலர் ஏற்றுக்கொள்ளலாம். வேறு சிலர் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். ஆரம்பத்தில் இருந்து எக்ஸத் லங்கா ஜாதிக பக்ஷயவும் இந்த முறையை எதிர்த்தே வந்துள்ளது.

ஆனால் ஜனாதிபதி அரசு

(6ஆம் பக்கம் பார்க்க)

## வடமராட்சிப் பகுதிக்கு புனர்வாழ்வு அமைச்சின் உயரதிகாரிகள் விஜயம்

யாழ்ப்பாணம், செப்: 7

புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சின் உயரதிகாரிகள் நேற்று வடமராட்சிப் பகுதிக்கு விஜயம் செய்தனர்.

புனர்வாழ்வு அமைச்சின் பணிப்பாளர் திரு: டி: அமரசிங்க, மேலதிகச் செயலாளர் திரு: ஜே: எஸ்: லோகேஸ்வரன் ஆகிய இருவருமே நேற்று வடமராட்சிக்கு விஜயம் செய்த உயர் அதிகாரிகள் ஆவர்.

அவர்களுடன் அதிகாரிகள் குழு ஒன்றும் கூடச் சென்றது. அதிகாரிகள் குழுவினர் பாதிக்கப்பட்ட இடங்களைப்பார்வையிட்டதோடு, நிவாரணம் வழங்க இதுவரை மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் குறித்தும் அறிந்து கொண்டனர்.

உயரதிகாரிகளும் குழுவினரும் நேற்று மாலையே கொழும்பு திரும்பினர்.

(அ-10)

### சுபநேரம்

(07 - 9 - 1989)

ஆவணி 22 வியாழக்கிழமை நக்ஷத்திரம்: அனுஷம்

சுபநேரம்:

07-84 முதல் 09 04 வரை

ராகுகாலம்:

01-84 முதல் 03 04 வரை

இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

### முச்சந்தி முரளி



இரண்டு பக்கங்களாலும் கட்டாயம் என்டால் இடை நடுவில இருக்கிறவை என்ன முடிவு எடுப்பினமோ......?

## தபாற் பொதிகள் அனுப்பப்பட்டன

யாழ்ப்பாணம், செப்: 7

யாழ்ப்பாணம் தபாலகத்தில் தேங்கியிருந்த வெளியூர்த் தபால்களைக் கொண்ட 200க்கும் மேற்பட்ட தபால் பொதிகள் நேற்று பஸ்மூலம் வவுனியாவுக்கு அனுப்பப்பட்டன.

அங்கிருந்து அவை ரயில் மூலம் கொழும்புக்கு அனுப்பப்படும்.

(ஓ-10)

## பாடசாலைகளை நடத்துவது குறித்து ஆராயக் கூட்டம்

### திங்களன்று கல்விப் பகுதியில்

யாழ்ப்பாணம், செப் 7

யாழ்ப்பாண மாவட்டப் பாடசாலைகளை இடையூறின்றி நடத்துவதற்குத் தடையாகவுள்ள காரணிகள் பற்றி ஆராய்வதற்கான கூட்டம் ஒன்று எதிர்வரும் 11ஆம்திகதி திங்கட்கிழமை யாழ் பிரதிக் கல்விப் பணிப்பாளரின் தலைமையில் கல்விப் பணிமனையில் நடைபெறவுள்ளது.

கொத்தணி அதிபர்கள், கொத்தணி மட்டத்திலான பாடசாலை அபிவிருத்திச்சபை ஒன்றியத்தின் இரண்டு பிரதிநிதிகள் சகல கோட்டக்கல்வி அதிகாரிகள் ஆகியோர் இந்த மாநாட்டில் கலந்துகொள்ள அழைக்கப்பட்டுள்ளனர்.

யாழ்: அரசாங்க அதிபர் உட்படப் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் இக்கூட்டத்தில் கலந்துகொள்ளவிருப்பதாகவும், பாடசாலைகளைச் சீராக நடத்தும் முக்கிய முடிவுகள் இதில் எடுக்கப்படவுள்ளதாகவும் எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை —

யாழ் மாவட்டப் பாடசாலை

(6ஆம் பக்கம் பார்க்க)

## புங்குடுதீவு துர்க்காதேவி கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், செப். 7

புங்குடுதீவு மேற்கு இருப்பிட்டி துர்க்காதேவி ஆலய புனருத்தாரண பிரதிஷ்டா மகாகும்பாபிஷேகம் இன்று வியாழக்கிழமை நடைபெறுகிறது.

இதற்கான கிரியைகள் கடந்த 3ஆம் திகதி ஆரம்பமாகி இருந்தன.

நேற்று தைலாப்பியங்கம் நடந்தேறியது.

[உள்ளே சிறப்பிதழ்]

## அராலியில் இன்று கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், செப் 7

அராலி கரைப்பிட்டி விநாயகர் ஆலய கும்பாபிஷேகம் இன்று வெகுசிறப்பாக நடைபெறுகிறது.

மகாகும்பாபிஷேகத்துக்கு முன்னோடியாக கடந்த ஞாயிற்றுக்கிழமை கர்மாரம்பக் கிரியைகள் தொடங்கப்பெற்றன.

மகா கும்பாபிஷேகக் கிரியைகள் இன்று காலை ஆரம்பமாகி நடைபெறுகின்றன. பல சிவாச்சாரியார்கள் இவற்றைச் சிறப்புற நடத்துவர்.

அதனைத் தொடர்ந்து 12 நாட்களுக்கு மண்டலாபிஷேகம் நடைபெற்று சகஸ்ர சங்காபிஷேகமும் இடம்பெறும்.

(அ)

## ஐந்து எதிர்க்கட்சிகளையும் சந்திக்க ஜனாதிபதி இணக்கம்

### நாளை இடம்பெறும்

கொழும்பு, செப் 7

அனைத்துக்கட்சிகள் மாநாட்டுக்கு முன்னதாக ஐந்து எதிர்க்கட்சிகளுடன் பேச்சு நடத்த ஜனாதிபதி பிரேமதாஸ ஒப்புக்கொண்டிருக்கிறார்.

இச் சந்திப்பு நாளை வெள்ளிக்கிழமை இடம்பெறும்.

அனைத்துக்கட்சி மாநாட்டுக்கு முன்னர் காபந்து அரசு ஒன்றை அமைப்பதுபற்றி பேசித் தீர்மானிக்க வேண்டும்: ஆகவே முன் கூட்டியே இது பற்றி பேச ஒருநாளை ஒதுக்கும்படி ஐந்து எதிர்க்கட்சிகள் கூட்டாக ஜனாதிபதியை கடிதம்மூலம் கேட்டிருந்தன.

இப்போது ஜனாதிபதி அக் கோரிக்கையை ஏற்றுள்ளனர்.

அனைத்துக்கட்சி மாநாடு வருகிற 13 ஆம் திகதி புதன்கிழமைநடைபெறவிருப்பது தெரிந்ததே.

இம் மாநாட்டில் கலந்துகொள்ளுமாறு 18 அரசியல் கட்சிகளுக்கு ஜனாதிபதி அழைப்பு விடுத்திருக்கிறார்.

## சூடுபட்டவர் மரணம்!

யாழ்ப்பாணம், செப்: 7

மல்லாவிப்பகுதியில் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தின்போது காயமடைந்து யாழ் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டிருந்தவர்களில் ஒரு

(6 ஆம் பக்கம் பார்க்க)

## பம்பலப்பிட்டியில் பொலீஸ் ஜீப் மீது குண்டுவீச்சு! மூவர் உயிரிழப்பு?

கொழும்பு, செப். 7

கொழும்பு, பம்பலப்பிட்டி காலி வீதியில் கிறீன்லண்ட்ஸ் (ஹோட்டலுக்கு அண்மையில் ஜீப்பில் ரோந்து வந்த பொலீஸார் மீது நேற்று மாலை திடீர் தாக்குதல் நடத்தப்பட்டது.

இந்தச் சம்பவத்தின்போது கிரனேட் வீசப்பட்டதாகவும் —

சம்பவத்தில் மூன்று பொலீஸார் உயிரிழந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது: எனினும் ஊர்ஜிதம் செய்ய முடியவில்லை.

இச்சம்பவத்தினால் நேற்று பம்பலப்பிட்டிப் பகுதியில் பெரும் பரபரப்பு நிலவியது.

(உ)

## ஜீ. சி. ஈ. உயர்தர பரீட்சை எப்போது? - மாணவர் குழப்பம்!

யாழ்ப்பாணம், செப். 7

ஜீ. சி. ஈ. உயர்தர பரீட்சை இப்போதைக்கு நடக்குமென்று நம்புவதற்கில்லை: அது பின்போடப்பட்டுவிட்டதாகவே கருத வேண்டியுள்ளது — என்று யாழ்ப்பாணத்தில் கல்வித் திணைக்கள வட்டாரங்கள் கருத்து வெளியிட்டன.

கடந்த ஆகஸ்ட் மாதத்தில் நடக்க வேண்டிய பிரஸ்தாப பரீட்சை நாட்டின் நெருக்கடி மிக்க சூழ்நிலை காரணமாக ஒத்தி வைக்கப்பட்டிருந்தது. இம் மாத நடுப்பகுதியில் நடைபெறும் என எதிர்பார்க்கப்பட்டது.

ஆயினும் இதுவரை பரீட்சையை நடத்துவதற்கான ஆரம்ப ஏற்பாடுகள்தானும் மேற்கொள்ளப்படவில்லை. வழமையாக பரீட்சை நடைபெறுவதற்குச் சுமார் ஒரு மாதத்திற்கு முன்னரே காகிதாதிகள் மற்றும் பொருள்கள், பரீட்சை மேற்பார்வையாளர்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## காணமற் போனவர் பிரச்சினை: செஞ்சிலுவைக் குழுவுக்கு அனுமதி?

கொழும்பு, செப். 7

காணமற்போனவர்கள்பிரச்சினை குறித்து சர்வதேச செஞ்சிலுவைச் சங்கக் குழு ஒன்று இலங்கை வந்து விசாரணை நடத்த அனுமதிக்கும் சாத்தியக்கூறுகள் பற்றி ஆராய்வதாக ஜனாதிபதி பிரேமதாஸா உறுதியளித்திருக்கிறார்.

இவ்விஷயம் குறித்து மேல் நடவடிக்கைகளைத் தொடரும்படி ஜனாதிபதி நீதி அமைச்சரைக் கேட்க இருக்கிறார்.

ஜனாதிபதி இந்த உறுதிமொழியை தன்னை கடந்த திங்கட்கிழமை சந்தித்த சட்டத்தரணிகள் சங்கத் தூதுக்குழுவுக்கு வழங்கினார். இத்தூதுக் குழுவுக்கு சங்கத் தலைவர் திரு: டெஸ்மண்ட் பெர்னாண்டோ தலைமை வகித்தார்.

ஒரு மணித்தியாலம் நீடித்த இச்சந்திப்பின் போது தூதுக்குழு ஜனாதிபதியிடம் ஒரு மகஜரைச் சமர்ப்பித்தது.

சங்கப் பேச்சாளர் ஜனாதிபதியின் உறுதிமொழி குறித்து கருத்துத் தெரிவித்தார். அவர் சொன்னதாவது:

சம்பந்தப்பட்டநாடுகளுக்கு விஜயம் செய்யும் சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கக் குழுக்கள், சர்வதேச மன்னிப்புச் சபையைப் போல தனது விசாரணைகள் பற்றிய அறிக்கைகளை பகிரங்கமாக வெளியிடுவதில்லை.

காணமற்போனவர்களை கண்டுபிடித்து உதவ சர்வதேச செஞ்சிலுவைச் சங்கக்குழுவை

6ஆம் பக்கம் பார்க்க)

## காங்கேசனில் அடகுநகை மீளளிப்பு

யாழ்ப்பாணம், செப். 7

காங்கேசன்துறை மக்கள் வங்கிக் கிளையில் அடகுவைத்த நகைகளின் இரண்டாவது தொகுதி எதிர்வரும் 12, 13, 19, 20ஆம் திகதிகளில் மீளளிக்கப்படும்.

இதற்கான நடவடிக்கைகளை மக்கள் வங்கி நிர்வாகம் துரிதகதியில் மேற்கொண்டு வருகிறது.

(ஓ-10)

## அரசியல் இணைப்பாளர் விடுத்துள்ள அறிக்கை

யாழ்ப்பாணம், செப் 7

வடமராட்சியில் உள்ள அப்பாவிப் பொதுமக்களை பயன்படுத்தி அகதிமுகாம் ஒன்றை உருவாக்கும் தந்திர நடவடிக்கை ஒன்று மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவித்தும் —

இத்தகைய தீய நோக்கத்திற்கு எவரையும் ஒத்துழைக்க வேண்டாமெனக் கோரியும் —

யாழ்மாவட்ட அரசியல் இணைப்பாளர் திரு ஆ. முருகநேசன் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அகதிகளாகச் செல்லுமாறு வடமராட்சி மக்கள் பயமுறுத்தப்படுவது தொடர்பாக இந்த அறிக்கை வெளியிடப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

வடமராட்சிப் பகுதியில் பெரிய யுத்தமென்று நிகழவிருக்கின்றது என்னும்பொய்ப் பிரசாரத்தை மக்கள் மத்தியில் வேண்டுமென்றே பரப்பி வருகின்றார்கள் என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்திலேயே தமிழர்கள் அகதிகளாகி உள்ள

(6 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

Kenwood Chef, sisil Fridge food, Warmer, Drink Mixer cooler Loud speakers, Vedio Deck, Tuner Radio, Show case மீன் தொட்டி Love birds Cage இரும்புக் கதிரை செற், பாவித்த நிலை கதவுகள், மற்றும் மின்சார உபகரணங்களுக்கு Jeyas Auction Mart, No. 161 Main Street Jaffna: (2117)

எம்மிடம் அண்மையில் வெளியிடப்பட்ட மருத்துவ நூல்கள் (Medical Books), அதிநவீன கம்பியூட்டர் நூல்கள் (Latest Computer-Books), கதைப் புத்தகங்கள், பாடப் புத்தகங்கள் மற்றும் சகலவிதமான வாழ்த்து மடல்களையும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்; மண்டேலா ரேடர் (புத்தகசாலை) இல:02 பஸ் நிலையம், யாழ்ப்பாணம்; (1551)

### சேவை

பாவித்த தரமான பொருட்களை வாங்க விற்க அல்லது பொருளுக்குப் பொருள்மாற்றிப் பெற்றுக்கொள்ள நாட வேண்டிய புதிய ஸ்தாபனம்! Jeyas Auction Mart, No. 161 Main Street, Jaffna. (2116)

### தவறிவிட்டது

யாழ் நகருக்கும் கந்தர் மடம் சந்திக்கும் இடையில் கையில் கட்டும் உருத்திராட்சம் (காய்) மாலை ஸ்கூட்டரில் செல்லும்போது தவறி விழுந்து விட்டது 12 காய் கொண்ட 4 பவுண் எடை உள்ள மாலை கண்டெடுத்துக் கொடுப்பவர்களுக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும்; கோண்டாவில் மேற்கு காளி கோவிலுக்கு உரித்துடையது. தொடர்பு: ஸ்ரீராஜா குருக்கள் கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்; (2058)

### செங்கமாரி

சிறுநீர் மஞ்சளாகவோ, சிவந்தோ போனால் செங்கமாரி சரலைப் பாதிக்கும்; எந்நிலையிலும் குணப்படுத்தலாம்; வாதம், வலி, குன்மம், சூதக வாயு, சிரங்கு, காமாலை நோய்களிலும் திறமைபெற்றவர் வைத்தியர் சிதம்பரப்பிள்ளை இராசரத்தினம்; வேலணை; (1845)

### தேவை

ஹோட்டல் ஒன்றுக்கு அனுபவமுள்ள சமையற்காரர் ஒருவரும், உதவியாளர் ஒருவரும் உடன் தேவை; தொடர்பு: சவோய் டூறிஸ்ட் ஹோட்டல், கீரிமலை வீதி, காங்கேசன்துறை: (சந்தியில் இருந்து 400 m. தூரம்) (2059)

### வாடகைக்கு

பலாலி வீதியில் 43 (131) இலக்கத்தில் உள்ள கடை வாடகைக்கு விடப்படும்; (அம்மன் வீதி சந்தியில்) தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: "அரியம் இல்லம்" 43 [131], பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்; (2050)

### SPOKEN ENGLISH

30 தொடர் வகுப்புகள் சனி, ஞாயிறு தவிர்ந்த ஏனைய நாட்களில்; நேரம் பகல் 10 - 11.30மணி ஆரம்பம்; 11-9-89 முன்பதிவு செய்தல் வேண்டும்: S. B. Iyar, 12 வைமன் வீதி, நல்லூர்: (1898)

### WIN IN LADIES ACADEMY

1-9-89 முதல் மனையியல் சங்கீத வகுப்புகள் வழமை போல் நடைபெறுகின்றன; விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்; 61/1 பருத்தித்துறை வீதி, ஆனைபந்தி; (1927)

### Typewriter

தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும் விற்கவும் சிறந்த முறையில் திருத்திக் கொள்ளவும், தமிழ், ஆங்கிலம் ரைப்பிங் செய்து கொள்ளவும் நாடுங்கள்: Fudo Enterprises 39/17, மின்சார நிலைய வீதி, 8 ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம்: (சி 8601)

### கோழிக்குஞ்சு விநியோகம்

Golden comet பிறவுண் பேட்டுக் குஞ்சுகள் பிறவுண் சேவற் குஞ்சுகள் 6ஆந்திகதி புதன்கிழமையும் cristombu farm புரொயிலர் குஞ்சுகள் 7ஆம் திகதி வியாழக்கிழமையும் விநியோகிக்கப்படும்; முன் கூட்டியே பதிவு செய்க. சற்குணராஜா & பிறதர்ஸ் பிரம்படி லேன், கொக்குவில்: (2084)

## COMPUTER COURSES

DIPLOMA IN BASIC PROGRAMMING

புதிய பிரிவுகள்: 08 - 09 - 1989 (பிரிவு - I)
15 - 09 - 1989 (பிரிவு - II)

நேரம் 9—00 a.m. இல் ஆரம்பமாகும்;

I.D.P. COMPUTER CENTRE

342, K.K.S. ROAD, JAFFNA.

Branch:- 7th mile post MALLAKAM

(C/3618)

## கேள்வி அறிவித்தல்

### வடக்கு கிழக்கு மாகாண அரசு கட்டிடங்கள் திணைக்களம்

ஏற்கனவே பிரசுரிக்கப்பட்ட கீழ் வரும் கட்டிடங்களுக்கான கேள்விப் பத்திரங்கள் பெறப்படும் திகதியும் பூரணப்படுத்தப்பட்ட கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்படும் திகதியும் இத்தால் பின்வருமாறு நீடிக்கப்படுகின்றன.

அ. ஊர்காவற்றுறை உணவுக் களஞ்சியம் திருத்துதல்.

ஆ. குருநகர் உணவுக் களஞ்சியம் திருத்துதல்

கேள்விப் பத்திரங்கள் விநியோகிக்கப்படும் கடைசித் திகதி 20-09-1989 நிறைவேற்று எந்திரி பணிமனை கட்டிடங்கள் திணைக்களம் யாழ்ப்பாணம்;

பூரணப்படுத்தப்பட்ட கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் புதிய கடைசித் திகதி 25-09-1989 கட்டிடங்கள் திணைக்களம், உள்துறைமுக வீதி, திருகோணமலை;

சி: சுப்பிரமணியம்,
பணிப்பாளர்,
கட்டிடங்கள் திணைக்களம்,
வடக்குகிழக்கு மாகாண அரசு,
திருகோணமலை;

உள்துறைமுக வீதி,
திருகோணமலை.

[சி-3627]

# உதைபந்தாட்டப் போட்டியில் முல்லை ஸ்ரார் சாம்பியன்

மாங்குளம், செப்: 7

முல்லைத்தீவு உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கிடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் முல்லைத்தீவு ஸ்ரார் விளையாட்டுக் கழகம் சாம்பியனாக தெரிவானது;

மற்றும் மெய்வல்லுனர் நிகழ்ச்சிகளில் ஆண்கள் பிரிவில் முல்லைத்தீவு இளைஞர் சமூகத்தைச் சேர்ந்த ஜனுப் பெறுகினும், பெண்கள் பிரிவில் முல்லைத்தீவு இளைஞர் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த செல்வி இ. பரிமாளசித்தேவியும் சாம்பியனாக தெரிவு செய்யப்பட்டனர்.

வெற்றி பெற்றோருக்கு முல்லை உதவி அரச அதிபர் திரு: வி: கந்தசாமி பரிசில்களை வழங்கினார்; நிகழ்ச்சிகள் யாவும் முல்லை விளையாட்டு உத்தியோகத்தர் திரு: கார்த்திகேசு தலைமையில் நடைபெற்றது.

(த-94)

## இராஜினாமா!

அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கத் தலைவர் பதவியில் இருந்த டாக்டர் எஸ். ஸி. போல் கடந்த ஞாயிறு ராஜினாமாச் செய்துவிட்டார்.

தனிப்பட்ட காரணங்களுக்காகத் தாம் ராஜினாமாச் செய்ததாக அறிவித்த அவர் மேலதிக விவரம் எதையும் வெளியிடவில்லை; (உ-எ)

## பயிர்ச் செய்கைக்கான கூட்டம்

முத்து ஐயன் கட்டு திட்ட 1989- 90 ஆம் ஆண்டு கால போகப்பயிர்ச்செய்கைக்கான கூட்டம் எதிர் வரும் 19 ஆம் திகதி புதுக்குடியிருப்பு உ. அ அதிபர் திரு. அ. இராசரத்தினம் தலைமையில் நடைபெறும்; (த- 113)

## நூல் அன்பளிப்பு

பச்சிலைப்பள்ளி, செப். 7

சாவகச்சேரி மகளிர்கல் லூரி நூல் நிலையத்திற்கு 400க்கு மேற்பட்ட அத்தியாவசியமான பாட நூல்களையும் நாவல்களையும் சாவகச்சேரி நகரசபை செயலாளர் த. நவரத்தினராசா அன்பளிப்பாக வழங்கியுள்ளார். (க- 117)

## கோரிக்கை

கொடிகாமம், செப். 7

நாவற்காடு கணபதிப்பிள்ளை வித்தியாலயத்தில் ஆண்டு 9 வகுப்பை நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும்.

பாடசாலை, அபிவிருத்திச் சபைக்கூட்டத்தில் இவ்வாறு தீர்மானிக்கப்பட்டது

வித்தியாலய அதிபர் திரு. மா. சிதம்பரநாதன் தலைமையில் கூட்டம் நடைபெற்றது. [க-75)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

1989 ஆம் ஆண்டு பட்டமளிப்பு விழாவிற்கு புகைப்படம் (கலர்) எடுத்தல்

1989 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் நடைபெறவுள்ள பொதுப் பட்டமளிப்பு விழாவின்போது புகைப்படம் (கலர்) எடுப்பதற்கு படப்பிடிப்பாளர்களிடமிருந்து கேள்விகள் கோரப்படுகின்றன படம் எடுப்பதற்கு விண்ணப்பிக்கவிருப்பம் உடையவர்கள் படப்பிரதி ஒன்றிற்கு உரிய விலைக்கூற்றை சிரேஷ்ட உதவிப் பதிவாளர்/ கல்வி பொறி யிடப்பட்ட கடித உறையில் 25- 09 89 இற்கு முதல் சமர்ப்பித்தல் வேண்டும்;

—பதிவாளர்

05- 09- 1989

(சி/3634)

# முன்னேஸ்வரம் திருவிழாக்கள் உள் வீதியில்

முன்னேஸ்வரம் வருடாந்த தேர்த்திருவிழா, தீர்த்தோற்சவம் ஆகியன ஆலய உள்வீதியில் இம்முறை இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது; (த-எ)

## விசேட ஆங்கில வகுப்பு

க.பொ.த. சா/உ, தொழில்நுட்ப, பல்கலைக்கழக பட்டதாரி மாணவர்களுக்குரிய

# AN ADVANCED ENGLISH COURSE

இரு முன்னணி ஆசிரியர்களின் இணைந்த சேவை

திரு. K. Sabanayakam திரு. R. Niles

4 மாத தீவிரப்பயிற்சி

ஆரம்பம்: 16 - 09 - 1989

பாடநெறி:
1. கடிதங்கள், கட்டுரைகள் எழுதும்பயிற்சி
2. வாசித்து விளங்கிக் கொள்ளுதல்
3 பிறருடன் பிழையின்றிப் பேசுதல்

(G. C. E O/L சித்தியடைந்தவர்கள், அதற்கு மேற்பட்ட தரம் உடையோருக்கு மட்டுமே உரியது)

★ இலவச அச்சடித்த பாடக்குறிப்புகள்
★ வகுப்புகள் சனி, ஞாயிறு தினங்களில் மட்டும் (மு. ப. 10-00—12-00)
★ கட்டணம் ரூபா 300, 00
(முழுப் பயிற்சிக்கும் 2 தவணைகளில் செலுத்தலாம்)

விபரங்களுக்கு:-

## ASTAN INSTITUTE

101/10, Stanley Road, Jaffna.

(மக்கள் வங்கிக்கருகாமையில்) (சி/3629)

## கேள்வி அறிவித்தல்

### வடக்கு கிழக்கு மாகாண அரசு கட்டிடங்கள் திணைக்களம்

ஏற்கனவே பிரசுரிக்கப்பட்ட பரந்தன் உணவுக் களஞ்சியத்துக்கான கேள்விப் பத்திரங்கள் விநியோகிக்கப்படும் திகதியும், பூரணப்படுத்தப்படும் கேள்விப் பத்திரங்கள் பெற்றுக் கொள்ளப்படும் திகதியும் பின்வருமாறு நீடிக்கப்படுகின்றன.

கேள்விப் பத்திரங்கள் கிளிநொச்சி கட்டிடங்கள் திணைக்களத்தில் விநியோகிக்கப்படும் புதிய கடைசித் திகதி 12 09-1989.

பூரணப்படுத்தப்பட்ட கேள்விப்பத்திரங்கள் வடகிழக்கு மாகாண அரசுக் கட்டிடத் திணைக்களப் (திருகோணமலை) பணிமனையில் ஏற்றுக் கொள்ளப்படும் புதிய கடைசித் திகதி 20-09-1989,

சி சுப்பிரமணியம்
பணிப்பாளர்,
கட்டிடங்கள் திணைக்களம்,
திருகோணமலை;

உள்துறைமுக வீதி,
திருகோணமலை.

[சி-3626]

## குவைத் நாட்டில் பெண்களுக்கு உடனடி வேலைவாய்ப்பு

50 HOSPITAL CLEANERS 4000 சம்பளம்

21 HOSPITAL SUPERVISORS 5000 ,,

வேலை 8.00 மணி நேரம்
சாப்பாடு, தங்கும் வசதி இலவசம்
உடனடிப் பிரயாணம்

மேலும் குவைத், டுபாய், அபுதாபி, சார்ஜா, ராஸல்கைமா, அஜ்மான், சவூதி அரேபியா ஆகிய நாடுகளுக்கும்

பணிப் பெண்கள் உடனடியாகத் தேவை

சம்பளம்: 3500 முதல் 4000 வரை

டெயிலர் சம்பளம்: 3600 முதல் 5000 வரை

மேலதிக விபரங்களுக்கு பாஸ்போட், பாஸ்போட் சைஸ் படம் 06, ஆகியவற்றுடன் உடனடியாக சமுகம் அளிக்கவும்;

## ஸ்கொயார் டீல்ஸ்

141, செட்டியார் தெரு;
(டமாமன் ஹவுஸ் மேல் மாடி)
கொழும்பு.1

தொலைபேசி: 436381 (1871)

## சேவை

அக்குபஞ்சர் — (சீன வைத்திய முறை)
ஹோமியோபதி — (ஜெர்மன் வைத்திய முறை)
வைத்திய சேவைகளைப் பெற

சங்கர் டிஸ்பென்சறி

ஐயனார் கோவில் வீதி,
வட புன்னாலைக்கட்டுவனுக்கு விரையுங்கள்
(2074)

## The Jaffna Education Centre

யாழ்ப்பாணக் கல்வி நிலையம்

G. C. E. O/L Day Class
G. C. E. A/L Science and Commerce

WEEK - END CLASS

G. A. Q. I. A. B.
Spoken English
Short Hand and Typing

புதிய பிரிவு
ஆரம்பம்: 08 09 - 1989
[2070]

## கேள்வி அறிவித்தல்

### வடகிழக்கு மாகாண அரசு கட்டிடங்கள் திணைக்களம்

ஏற்கனவே பிரசுரிக்கப்பட்ட கீழ்வரும் கட்டிடங்களுக்கான கேள்விப்பத்திரங்கள் பெறப்படும் திகதியும், பூரணப்படுத்தப்பட்ட கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் திகதியும் இத்தால் பின்வருமாறு நீடிக்கப்படுகின்றன.

அ. ஒட்டிசுட்டான் அஞ்சல் அலுவலகம் புனர் நிர்மாணம் செய்தல்:

ஆ. மாங்குளம் ஒருங்கிணைப்பு சபைக்கான அலுவலகம் நிர்மாணித்தல்,

கேள்விப் பத்திரங்கள் விநியோகிக்கப்படும் புதிய கடைசித் திகதி நிறைவேற்று எந்திரி பணிமனை கட்டிடங்கள் திணைக்களம் முல்லைத்தீவு. 12-09-1989.

பூரணப்படுத்தப்பட்ட கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் புதிய கடைசித் திகதி 20-9-1989 கட்டிடங்கள் பணிப்பாளர். பணிமனை உள்துறைமுக வீதி, திருகோணமலை.

சி. சுப்பிரமணியம்,
பணிப்பாளர்,
கட்டிடங்கள் திணைக்களம்
வடகிழக்கு மாகாண அரசு,
திருகோணமலை;

உள்துறைமுக வீதி,
திருகோணமலை,

(C/3625)

## 7 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### திரு. பொ. தயாபரன்

(பிரதான நிர்மாண பொறியியலாளர்
கட்டடத் திணைக்களம்)

தோற்றம்: 16 - 08 - 1936
மறைவு: 07 - 09 - 1982

குடும்பத்தின் குலவிளக்காய்
ஒளிவீசும் வேளையிலே
காலன் கவர்ந்துவிட்ட
அன்புத் தந்தையின்
பாசநினைவுகளின்
துயரத்தைத் தாங்காது
நெஞ்சே வெடிக்கிறது
எனினும்
ஆண்டுகள் ஏழல்ல
எழுநூறு சென்றாலும்
உங்களின் நினைவுகள்
உயிருள்ளவரை நிலைத்திருக்கும்!

பிரிவால் வாடும்:
மனைவி, பிள்ளைகள்.

69, கோவில் வீதி,
யாழ்ப்பாணம்.

(2109)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொய்யாமொழி

குறள்:

பல குடை நீழலும் தங்குடைக் கீழ்க் காண்பர்
அலகுடை நீழலவர்;

பொருள்:

நெல்வளம் உடைய தண்ணளி பொருந்திய உழவர், பல அரசரின் குடை நிழல்களையும் தம் குடையின் கீழ்க் காண வல்லவர் ஆவர்;

உதயன்

இல: 292/2, நாவலர் வீதி, தொலைபேசி: 24808
22078
யாழ்ப்பாணம்;
07 - 09 - 1989 1 பெ; இல; 88

# வருடாந்த வாய்ப்பாட்டு ஏன்?

விசர் நாய்க் கடி நோய்த் தடுப்பூசி மருந்துத் தட்டுப்பாடு வவுனியாவிலும் நிலவுவதாக செய்திகள் வெளிவந்துள்ளன; யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியிலும் குறிப்பிட்ட மருந்து போதிய அளவில் கிடைக்காமை ஏற்கனவே தெரிந்த விடயம்.

விசர்நாய்க் கடிக்கு ஆளான பலர் இந்த மருந்துத் தட்டுப்பாட்டினால் உயிர் ஆபத்தை எதிர்நோக்கிய வண்ணம் இருக்கிறார்கள்; யாழ்ப்பாணத்திலும் சரி, வவுனியாவிலும் சரி அரசாங்க ஆஸ்பத்திரி வைத்தியர்களும், நிர்வாகிகளும் கொழும்பின் மேல் பழியைப் போட்டு விட்டு கையை விரிக்கிறார்கள்!

விசர்நாய்க் கடி நோயிலிருந்து மக்களைக் காப்பாற்ற முடியாத அவல நிலை, ஆபத்தான நிலை இந்த வருடம் மட்டும் ஏற்பட்டதல்ல; இது வருடாந்த வழக்கமாகி விட்டது! குறிப்பிட்ட மருந்தைப் போதிய அளவில் கொழும்பில் இருந்து தருவித்து வைப்பதற்குத் தமிழ்ப் பகுதியில் உள்ள பெரியாஸ்பத்திரிகளின் நிர்வாகிகள் போதிய கவனம் எடுப்பதில்லை என்பதே இந்த ஆபத்தான நிலைப்பாட்டிற்கு உண்மை நிலை எனக் கருத வேண்டி உள்ளது;

கொழும்பில் உள்ள அரசாங்க மருந்துக் களஞ்சியம் வருடாந்தம் குறிப்பிட்ட எண்ணிக்கையான ஏ, ஆர். வி; தடுப்பூசிக்குப் போதுமான மருந்தையே அனுப்புகிறது; அதனால் குறிப்பிட்ட காலத்தில் நாய்க் கடிக்கு ஆளாகும் நோயாளர் எண்ணிக்கை அதிகரிக்கும் போது மருந்துக்குத் தட்டுப்பாடு நிலவுகிறது; மேலதிக மருந்துக்கு விண்ணப்பித்தால் அரச மருந்துக் களஞ்சியம் ஒன்றில் தன்னிடமும் கையிருப்பில் இல்லை என்கிறது அல்லது மருந்தைத் தமிழ்ப் பகுதிகளுக்கு அனுப்பி வைக்கத் தாமதம் செய்கிறது!

இவ்வாறாகவும், இன்னும் பலவாறாகவும் தமிழ்ப் பகுதிகளில் உள்ள ஆஸ்பத்திரி நிர்வாகிகள் கொழும்பு மருந்துக் களஞ்சியத்தின் மீது குற்றத்தைச் சுமத்தித் தாம் தப்பி விடுகிறார்கள்; ஆஸ்பத்திரி ஊழியர்களை நேரில் அனுப்பினாலுங்கூட ஏ; ஆர்; வி; தடுப்பூசி மருந்தை கொழும்பு மருந்துக் களஞ்சியத்தினர் கொடுப்பதில்லை என்றும் இங்குள்ளவர்கள் கூறுகிறார்கள்;

கொழும்பு மருந்துக் களஞ்சியம் சென்ற வருடம் வழங்கிய மருந்து போதாது எனக் கண்டால் இந்த வருடத்தில் அதிகமாக அனுப்புமாறு தமிழ்ப் பகுதிகளில் உள்ள ஆஸ்பத்திரி நிர்வாகிகள் விண்ணப்பிக்கிறார்களா? அந்த விண்ணப்பத்தை உரிய அத்தாட்சிகளுடன், உரிய தாக்கத்தினை விளக்கி முன்னேற்பாடாகவே உரிய நேரத்தில் அனுப்புகிறார்களா? அந்தளவுக்கு நோயாளர் மீது எமது பிரதேச நிர்வாகிகளுக்குச் சிரத்தை உண்டா என்பதும் தெரிய வேண்டும்;

அவ்வாறு விண்ணப்பித்திருந்தும் கொழும்பு மருந்துக் களஞ்சியம் போதிய மருந்தை வழங்காவிடின் அது குறித்து உயர் மட்டத்தில் முறையிடப்பட்டுள்ளதா? நாடாளுமன்றத்தில் இந்தப் பிரச்சினையைப் பெரிதாக எழுப்பி தமிழ்ப்பகுதி நோயாளர் புறக்கணிக்கப்படுவது குறித்து பகிரங்கப்படுத்தப்பட வேண்டும் என்றுவது முயற்சிக்கப்பட்டதா? நிலைமையை விளக்கி பூரண தகவல்களுடன் பத்திரிகைகளுக்காவது அறிக்கை விடப்பட்டதுண்டா? மருந்து இல்லாத நிலையை உள்விட்டு இரகசியமாக வைத்திருக்க எண்ணினால் நோயாளர் பாதிப்பை நீக்க முடியுமா?

நாய்க்கடிக்கு ஆளான நோயாளர்கள் ஆஸ்பத்திரிக்குப் போனாலும் மருந்து இல்லை; கொழும்பிலிருந்து வரவில்லை, அனுப்பவில்லை என்று சொல்வதுடன் தமது கடமை முடிந்து விட்டதாக இங்குள்ள அதிகாரிகள் நினைக்கிறார்கள்: உயர்மட்டத்துடன் போராடியாவது அவர்களுக்கு இடித்துரைத்தாவது, ஆபத்தை எதிர்நோக்கும் தமிழ் நோயாளரைக் காப்பாற்ற முன்னேற்பாடாகவே நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நினைக்கிறார்களா? செயற்படுகிறார்களா?

நோயாளர் படும் அவஸ்தையை அவர்கள் எதிர்நோக்கும் ஆபத்தை உணர்ந்தால் இந்த ஏனோ தானோ போக்கு இருக்க நியாயமில்லை. வருடாந்தம் மருந்து இல்லை என்ற நிலைப்பாடு தொடர்கதையாக மாறவும் வாய்ப்பில்லை;

இங்குள்ள அதிகாரிகள் தக்கபடி முயன்றும் கொழும்பு புறக்கணிக்குமாயின், குறிப்பிட்ட மருந்தைத் தருவிக்க மாற்றுவழி எதையும் கண்டுபிடிக்க முடியாமலா போகும்? முயற்சியும் பொறுப்புணர்ச்சியும் இருந்தால் வருடாந்த "வாய்ப்பாட்டு" வரவேண்டிய அவசியம் இருக்காது;

## ஆனந்த வாழ்வினை அளித்திடுவாய்!

தெல்லியூர் பதிதனில் அமர்ந்தவளே அம்மா!
தேன்தமிழ் பாவினில் உறைபவளே அம்மா!
அள்ளியே அருள்தனை பொழிந்திடுவாய் அம்மா!
ஆனந்த வாழ்வினை அளித்திடுவாய் அம்மா!
நல்லவை பெருகிட வழிசமைப்பாய் அம்மா!
நாட்டினில் அமைதியை ஏற்றிடுவாய் அம்மா!
துன்பமும் துயரமும் தீர்த்திடுவாய் அம்மா!
தாயநல் தெல்லியூர் துர்க்கையே அம்மா!

ஆக்கம்:

அரியாலையூர் ஐ. குமரதாசன்

(இன்று துர்க்கை அம்மன் 7 ஆம் திருவிழா)

## வாழ்க்கைச் செலவுப் புள்ளி

கொழும்பு செப்-7

ஆகஸ்ட் மாத வாழ்க்கைச் செலவுப்புள்ளி 844; 3 என புள்ளி விவரத்திணைக்களம் செய்திக்குறிப்பு ஒன்றில் தெரிவிக்கிறது;

ஜூலை மாதத்தில் வாழ்க்கைச் செலவுப் புள்ளி 824 5 ஆக இருந்தது; (இ எ)

## மேலும் ஐந்து சிறுவருக்கு சேமிப்பு கணக்கு

யாழ்ப்பாணம், செப், 7

தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயத்தில் அமைக்கப்பட்டுள்ள இலங்கை வங்கி கருமபீடத்தில் செவ்வாயன்று மேலும் ஐந்து அநாதைச் சிறுவர்களுக்கு சேமிப்பு கணக்குகள் ஆரம்பிக்கப்பட்டன;

இந்த வைபவத்தில் சிறப்பு விருந்தினராக சட்டத்தரணி ஆர்; என்: சிவப்பிரகாசம் கலந்து கொண்டார்;

ஊரெழு கொத்தணிப் பாடசாலை அதிபர் திரு; டானியல் ஐந்து சிறுவர்களுக்கான இந்த கணக்கை தலா நூறு ரூபா வீதம் வங்கியின் பீடத்தில் செலுத்தி சேமிப்புக் கணக்கை ஆரம்பித்து வைத்தார்; (இ- 10)

முல்லைத்தீவு வைத்தியசாலைக்கு

# மின்சாரம் இல்லாததால் நோயாளிகள் பெரும் அவதி

### சிலர் யாழ். ஆஸ்பத்திரிக்கு மாற்றம்

யாழ்ப்பாணம், செப்7

முல்லைத்தீவு வைத்தியசாலையில் இரவுக் கடமையாற்றும் ஊழியர்கள் மெழுகுவர்த்தியிலும், டோர்ச் லைட்டிலுமே தமது கடமைகளை மேற்கொள்கின்றனர்;

முல்லைத்தீவு மாவட்டத்தின் சில பகுதிகளுக்கு ஜெனரேட்டர் மூலம் மின்சார வசதி வழங்கப்படுகிற போதிலும் சுமார் நூறு நோயாளர்களைக் கொண்ட முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலைக்கு ஜெனரேட்டர் இல்லாதிருப்பது பெருங் குறையாகும் எனத் தெரிவிக்கப்படுகிறது;

ஜெனரேட்டர் வசதி அங்கு இல்லாததன் காரணமாக அவசர நோயாளர்கள் உடனடியாக யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைக்கப்படுகின்றனர்; (இ-10)

## மினி இறைச்சிக் கடைகள் அகற்றப்பட்டு விட்டன

குருநகர், செப்; 7

யாழ். மாநகரசபை எல்லைக்குள் சட்டவிரோதமாக இயங்கி வந்த மினி இறைச்சிக் கடைகள் அகற்றப்பட்டுள்ளன;

கடந்த சில மாதங்களாக மாநகரசபை எல்லைக்குள் திடீர் 'மினி' இறைச்சிக்கடைகள் தோன்றியதை எதிர்த்து யாழ்; மாட்டிறைச்சி வியாபாரிகள்சங்கம் குரல்கொடுத்து வந்தது தெரிந்ததே.

சட்டவிரோத 'மினி' இறைச்சிக்கடைகளினால் யாழ்-மாநகர சபையால் அங்கீகரிக்கப்பட்டிருந்த இறைச்சிக் கடைகளின் வியாபாரம் பெரிதும் பாதிக்கப்பட்டதாக சங்க நிர்வாகிகளில் ஒருவர் உதயனுக்கு தெரிவித்தார்;

(இ-51)

## தேவரையாளி இந்து அதிபர் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், செப் 7

டிசம்பர் மாதம் ஜீ; சி; ஈ, (சாதாரண) பரீட்சைக்கு மீண்டும் தோற்றவுள்ள தேவரையாளி இந்துக் கல்லூரி மாணவர்கள் 11 ஆம் திகதி கல்லூரிக்கு சமுகம் கொடுக்குமாறு கல்லூரி அதிபர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

(இ-10)

## நுளம்புத் தொல்லை

யாழ் காப்புறுதிக் கூட்டுத்தாபன கட்டிடத்துமுன்பாகவுள்ள தண்ணீர்வாய்க்காலில் குப்பை கூளங்கள் அழுக்குகள் குவிந்து கிடக்கின்றன; இதனால் தண்ணீர் ஓடமுடியாமல் சேறும், சகதியுமாக இருக்கிறது; நுளம்புகளும் உற்பத்தியாகி உள்ளன; தினமும் பன்றிகள் வந்து சேறு சகதிகளைக் கலக்குவதால் துர்நாற்றமும் வீசுகின்றது; ஆகவே யாழ் மாநகர சபை அதிகாரிகள் இதில் கவனமெடுத்து நுளம்புத் தொல்லைகளிலிருந்தும் கொடிய தொற்றுநோய்களிலிருந்தும் மக்களைக் காப்பாற்றுமாறு பணிவன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்;

—வி. பிரான்சிஸ்

யாழ்ப்பாணம்;

## முக்கிய சேவை தொடருமா?

சில வருடங்களுக்கு முன், "கைதடி வடக்கு" என்னும் பெயர்ப் பலகையுடன் காலை, மதியம், மாலை ஆகிய மூன்று நேரத்திலும் யாழ் நகரில் இருந்து கைதடி வடக்கு நோக்கி இ.போ.ச ஓர் பஸ் சேவையை நடத்தியது;

இப் பேருந்து சேவை 1978 ஆம் ஆண்டு தொடங்கி 1984 நடுப்பகுதி வரை இயங்கியது பின் இச்சேவை நிறுத்தப்பட்டது;

பாடசாலை மாணவர்கள், வெளியூர்களுக்கு வேலைக்கு செல்வோர், தமது தோட்டப் பொருட்களை விற்க சந்தைக்கு செல்லும் விவசாயிகள் போன்றவர்களினால் இச் சேவை பெருமளவில் பயன்படுத்தப்பட்டு வந்தது;

தற்போது இவர்கள் காலையில் மூன்று மைல் தூரம் நடந்து வந்தும், துவிச்சக்கர வண்டிகளில் வந்தும் கைதடிச்சந்தியை அடைந்து அங்கிருந்து பஸ் எடுப்பதை காணக்கூடியதாக உள்ளது;

நாளொன்றுக்கு இருமுறையாவது இ; போ; ச தனது சேவையை நடத்தி இவ்வூர் வாசிகளின் முக்கியதேவையை பூர்த்தி செய்ய முன்வருவார்களா?

— எஸ்; குமார்

கைதடி;

யாழ். செயலகத்தில்

## பிறப்புச்சான்றிதழ்வழங்கும் வேலை மீண்டும் துரிதம்

யாழ் செயலகத்தில் பிறப்பு இறப்புச் சான்றிதழ்களை வழங்கும் வேலைகள் நேற்று முன்தினம் முதல் மீண்டும் வழமைக்குத் திரும்பின;

'போட்டோஸ்ரட்' இயந்திரம் பழுதடைந்ததை அடுத்து இந்தச் சான்றிதழ்களை வழங்குவதில் சிறிது மந்த நிலை ஏற்பட்டது;

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மேற்கொண்ட நடவடிக்கைகளை அடுத்து 'போட்டோஸ்ரட்' இயந்திரம் அவசர அவசரமாகத் திருத்தப்பட்டு சான்றிதழ்கள் வழங்கும்வேலைகள் துரிதமாக்கப்பட்டுள்ளன; (இ-9)

## தபாற் திணைக்கள ஊழியர் 45 வயதில் 25 வருடங்களை பூர்த்திசெய்தால் ஒய்வு

தபாற் திணைக்கள ஊழியர்கள் விரும்பும் பட்சத்தில் 45 வயதில் 25 வருட சேவையைப் பூர்த்தி செய்தால் ஒய்வு பெறலாம் ஆனால் 56 வயதில்தான் ஓய்வூதியப் பணத்தைப் பெறலாம்;

இப்படியான சுற்றுநிருபம் ஒன்றை பொது நிர்வாக அமைச்சு வெளியிட்டுள்ளது;

இச்சுற்று நிருபம் கிடைத்தும் இச்சேவையைப் பூர்த்தி செய்து இளைப்பாற விரும்பிய வர்கள் பின்நிற்பதாக அறிய வந்துள்ளது;

இதைத் தொடர்ந்து அஞ்சல்தொலைத்தொடர்புசேவையாளர் சங்க யாழ் கிளை மகஜர் ஒன்றை பொது நிர்வாகஅமைச்சுக்கு அனுப்பியுள்ளது.

45 வயதில் ஒய்வு பெறும் போது ஓய்வூதியத்தை உடன் வழங்கவேண்டும் என்ற அம்மகஜரில் கோரப்பட்டுள்ளது; (இ- 8)

## அநுராதபுரத்தில் தேங்கிக் கிடந்த 470 தபாற் பொதிகள் அனுப்பப்பட்டு விட்டன

வவுனியா, செப் 0

அநுராதபுரத்தில் தேங்கிக் கிடந்த வடபகுதிக்கான 470 தபால் பொதிகளும் கடந்த திங்கட்கிழமை வவுனியா கொண்டுவரப்பட்டு, செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் பகுதிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டன;

இதில் வவுனியாவுக்கு 31 பொதிகளும் முல்லைத்தீவுக்கு 46 பொதிகளும், மன்னாருக்கு 69 பொதிகளும், யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகியவற்றிற்கு 324 பொதிகளும் அனுப்பி வைக்கப்பட்டன என்று வவுனியா தபாலக உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்;

கடந்த வாரம் தென்பகுதியில் நடைபெற்ற பொது வேலை நிறுத்தத்தினால் கொழும்பில் தேங்கிக்கிடந்த இந்தத் தபால் பொதிகள் கடந்த ஞாயிறன்று லொறிஒன்றின் மூலம் அநுராதபுரம் கொண்டு வரப்பட்டது குறிப்பிடத்தக்கது; (த - 164)

## ரோட்டறிக் கழக கருத்தரங்கு

யாழ்ப்பாணம், செப். 7

யாழ்; ரோட்டறிக்கழகம் தனது வாராந்தக் கூட்டங்களின் குறிகிய மட்டத்தில் கருத்தரங்குகளையும் சிறப்புரைகளையும் நடத்தி வருகின்றது;

கடந்த 24 ஆம் திகதி "எமது நாளாந்த வாழ்க்கையில் எண் சோதிடத்தின் பங்களிப்பு" என்னும் பொருள் பற்றிய கருத்தரங்கை திரு: ஜி; ஆர்; கிருபைராஜ் நடத்தினார்;

(இ-எ)

## பல்கலைக்கழகத்தில் சிற்பக் கண்காட்சி

யாழ்ப்பாணம், செப்; 7

மரச் சிற்பங்களின் கண்காட்சி ஒன்று நாளை 8 ஆம், 9 ஆம், 10 ஆம் திகதிகளில் யாழ்; பல்கலைக்கழக வளாகத்தில் நடைபெற இருக்கிறது:

யாழ்; பல்கலைக்கழக கலைவட்டத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இக்கண்காட்சியில் சிற்பக்கலைஞர் ஐயாத்துரை விஸ்வலிங்கத்தின் சிற்பங்கள் காட்சிக்கு வைக்கப்படும்;

உபவேந்தர் பேராசிரியர் அ: துரைராஜா கண்காட்சியை ஆரம்பித்து வைப்பார்; (த-160)

## கீழ் வகுப்பு மாணவர்கள் பாடசாலை செல்கின்றனர்

யாழ் நகரப் பாடசாலைகள் சிலவற்றுக்கு கீழ் வகுப்பு மாணவமாணவிகள் குறைந்த அளவில் வருகை தருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது;

கடந்த சில வாரங்களாக பாடசாலைகள் திறக்கப்பட்டு வகுப்பாசிரியர்கள் தினமும் வந்து போகின்றனர்; ஆனால் மாணவர்கள் செல்லாத நிலைமை இருந்து வந்தது; (இ- 51)

# சிவாச்சார்யாபிஷேக தீட்சை

சைவ சமயத்தில்தீட்சை முக்கியமானது: இது ஆன்ம ஈடேற்றம் கருதிச் செய்யப்படுவது. குரு சிஷ்யனை எழுவகைத் தீட்சைகளின் மூலம் பக்குவம் எய்தும்படி செய்கின்றார்; இத்தீட்சைகளுள் ஔத்ரி தீட்சை மிக விரிவானதும் நிறைந்த தத்துவக் கருத்துக்களைக் கொண்டதுமாகும்; பெரும்பாலும் சைவக்குருமார்கள் இத் தீட்சையைப் பெற்றுக் கொள்வார்கள்; இத் தீட்சையைப் பெற்றவர்களே, ஆத்மார்த்த பரார்த்தக் கிரியைகள் செய்வதற்கு அருகதை உடையவர்கள்;

ஹோத்ரி என்னும் இத் தீட்சை முறையில் யாகசாலை குண்டங்கள், மண்டலங்கள் ஆகம விதிப்படி அமைத்து ஆகுதிகள் கொடுத்து குரு சிஷ்யனுக்கு அருள் பாலிப்பர்;

மேற்படி தீட்சையின் முதலாவது அங்கமாக சுவாமியிடத்தில் அனுக்ஞை பெற்று சிஷ்யனின் கண்களை உரிய மந்திரங்களால் கட்டி, அவன் கையைப் பிடித்து வந்து, மண்டலத்தின் முன்னே நிறுத்தி, கண்கட்டை அவிழ்த்து விட்டு மண்டலத்தில் புஷ்பத்தைச் சாத்தும்படி குரு சிஷ்யனை வழிப்படுத்துவார்; புஷ்பம் மண்டலத்திலுள்ள லிங்கங்களுள் எந்த லிங்கத்திற்குச் சாத்தப்படுகிறதோ அதை அனுசரித்து தீட்சாநாமம் வழங்கப்படும்;

பின்னர் குரு ஆவாகித்த சிவ ஹஸ்தத்தால் மலமாயா கர்ம பாசங்கள் நிவாரணமாவதற்காக சிஷ்யனின் சிரசில் கையை வைத்து மூலமந்திரத்தை உச்சரித்து அனுக்கிரகம் செய்வார்; மேலும் தனக்கும் சிஷ்யனுக்கும் தர்ப்பை மூலம் தொடர்பு ஏற்படுத்தி சிஷ்யனின் பின் கலா நாடியால் வெளிப்பட்டு தன்னுடைய இடைகலையில் பிரவேசித்து அடங்கி சிவ சொரூபமாகி தனது இரேசகத்தால் பிரவேசிக்கச் செய்து சிஷ்யனுடைய இரேசகத்தால் [illegible] திரும்பும்; சிஷ்யனின் [illegible] சம்பாதாகுதி செய்து சிவகலை தம் சித்திரமாவதற்கு குரு விதிப்படி ஆகுதிகள் செய்வார்; பூர்ணாகுதி செய்தபின் பஞ்ச பிரம மந்திரங்களை சிஷ்யனுக்கு உபதேசித்து வாக்கு தீட்சை நிகழ்த்துவார்.

இறுதியில் யாகசாலையில் ஸ்தாபித்து பூஜிக்கப்பட்ட சிவசொரூபமான ஐந்து கும்பங்களாலும் சிஷ்யனுக்குக் குரு அபிஷேகம் செய்வார்; இதுவே சிவாச்சார்ய அபிஷேகம் என்று சிறப்பித்து அழைக்கப்படும்; சிவாச்சார்யாபிஷேகம் பெற்றவரே ஆத்மார்த்த பரார்த்தக் கிரியைகள் செய்வதற்கு அருகதை உடையவராவர்;

தீட்சாகுரு, பூஜா உபகரணங்கள் சுருக்சுருவம் முதலியவற்றை சிஷ்யனின் கைகளில் கொடுத்து தீட்சை, பிரதிஷ்டை, உற்சவம் முதலிய கிரியைகளைச் செய்வதற்கு அதிகாரம் வழங்குவார்;

சிவாச்சார்யாபிஷேகம் பெற்றவர் மற்றோரால் வணங்கப்படுவதற்கும் உபதேசம் செய்வதற்கும் தகுதியுடைய குருவாக விளங்குவார்;

கலாநிதி சிவஸ்ரீ
கா. கைலாசநாதக்குருக்கள்
யாழ் பல்கலைக்கழகம்

## கண்டதும் கேட்டதும்

வடபகுதியில் மக்கள் அடிக்கடி தொலைக்கும் பொருள் ஒன்று உண்டு; அது தான் அடையாளக் கார்ட்;

அடையாளக் கார்ட் இன்றி எவரும் வாசல்படியைத்தாண்ட முடியாது; அப்படியான காலம் இது;

சிலர் அடையாளக் கார்ட் கவருக்குள் ரூபா நோட்டுக்களையும் வைக்கிறார்கள்; அடையாளக்கார்ட் தொலையும் போது அதுவும் சேர்ந்து போகிறது; அடையாளக் கார்ட் திரும்பக்கிடைத்தாலும் பணம் கிடைப்பதில்லை;

யாழ்ப்பாண மாவட்டத்தில் மாதம் 500க்கும் மேற்பட்ட அடையாளக்கார்ட்டுக்கள் காணாமற் போகின்றன; என்பது யாழ் செயலக ஆட்பதிவுத் திணைக்கள உயர் அதிகாரி ஒருவர் கூறுகிறார்;

கடந்த மாதம் மட்டும் 2 ஆயிரத்து 400 பேர் வரை அடையாளக் கார்ட்டுக்கு புதிதாக விண்ணப்பித்துள்ளனராம்;

வட பகுதி மக்கள் புதிதாக அடையாளக் கார்ட்டுகளைப் பெற்றுக் கொள்வதற்கு இரண்டு மாதத்துக்கு மேல் காத்திருக்க வேண்டி இருக்கிறது;

ஆனால் கொழும்பில் அடையாளக் கார்ட்டுகளை இழந்தவர்கள் அதனை உடனுக்குடன் பெற்றுக்கொள்ள அரசு வழிசெய்திருக்கிறது;

— வடக்குக்கு ஒரு நீதி
தெற்குக்கு ஒரு நீதி போலும்!

—செய்தி லோலன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

    

# புங்குடுதீவு இருப்பிட்டி அம்பாள் மகா கும்பாபிஷேக சிறப்பிதழ்

( 07 - 09 - 1989 )

"ஆரணி சடைக்
கடவுளாரணி யெனப்புகழ்
அகிலாண்ட கோடி யீன்ற
அன்னையே! பின்னையும்
கன்னியென மறை பேசும்
ஆனந்த ரூப மயிலே!"

எனத் தாயுமான சுவாமிகள் பாடிப் பரவிய சிவசக்தியின் திருவிளையாடல்களைப் பக்தர்கள் உணர்ந்து அனுபவிக்கும் புங்குடுதீவு-மேற்கு இருப்பிட்டி பட்டையகாரன் வளவு அம்மன் என வழங்கும் துர்க்கா தேவிக்கு இன்று (07 09-89) மகா கும்பாபிஷேகம் நடைபெறுகின்றது.

யாழ்ப்பாணக் குடா நாட்டை அடுத்துள்ள ஒவ்வொரு சிறுதீவும் புராதனப் பெருமை வாய்ந்தனவாகக் காணப்படுகின்றன. சப்த தீவுகளுக்கும் நடுநாயகமாக அமைந்துள்ளது புங்குடுதீவு. இதன் காரணமாகவோ என்னவோ இலங்கையை ஆண்ட ஒல்லாந்தரும் ஒவ்வொரு தீவுக்கும் தமது நாட்டுப்

## வரலாற்றுப் பெருமை படைத்த புங்குடுதீவு துர்க்காதேவி ஆலயம்

பெயர்களை இட்ட போது புங்குடுதீவை மிடில்பேர்க் (Middleburg- மத்திய நகரம்) என அழைத்தனர். யாழ்ப்பாணத்தில் இருந்து தென்மேற்கே 18 மைல் தூரத்திலுள்ள புங்குடுதீவு, சைவக் கோயில்கள் நிறைந்த ஊர். இங்குள்ள 15க்கு மேற்பட்ட கோவில்களுள் பெரும்பாலானவை சக்தியின் பெருமை கூறும் அம்மன் கோவில்களாகும். கிழக்கே அரசியாக வீற்றிருக்கும் கண்ணகி அம்மன் கோவிலையும், பெருங்காடு எனும் பேரூரில் மகமாரி அம்மன் கோவிலையும் மேற்கே இருப்பிட்டியில் காளியம்மன் கோவிலையும், குறிகட்டுவானில் கோவில் கொண்டிருக்கும் பேச்சியம்மன் எனும் ஜெகன்மாதா மனோன்மணி அம்பாள் கோவிலையும் காணலாம். மேற்கு இருப்பிட்டியில் அமைந்திருப்பதே துர்ககாதேவியின் திருக்கோவிலாகும்.

சோழ மன்னர் காலப் பட்டையகாரன் என்ற அதிகாரிக்கு உரிமையாக இருந்த வளவில் எழுந்தருளியிருந்தமையால் "பட்டையகாரன் வளவு அம்மன்" எனும் பெயரும் வரக்காரணமாய் இருந்தது.

இத்திருத்தலத்தின் முன்புறம் இருக்கும் பகுதி "தோப்பு" எனும் பெயரால் வழங்கிவந்தது. இங்கு கண்டெடுக்கப்பெற்ற கோவில் அழிவுச் சின்னங்களையும், ஒல்லாந்தர் கால நாணயங்கள் போன்ற தடயங்களையும் கொண்டு பார்க்கும் போது அந்நியர் ஆட்சிக் காலத்தில் இக்கோவில் உடைக்கப்பட்டிருக்கலாம் என எண்ண இடமுண்டு. பிற்காலத்தில் பிரதான வீதிக்கருகில் இப்போதிருக்கும் கோவில் அமைக்கப்பட்டிருக்கலாம்.

இற்றைக்கு 80, 40 ஆண்டுகளுக்கு முன் இராஜ ராஜேஸ்வரி அம்மன் என அழைக்கப்பட்ட இத்துர்க்காதேவி கோயிலில் நித்திய பூசைகள் நிறைவுற நடைபெற்று வந்தன. அக்காலத்திலிருந்த குருமார்களில் நயினை பரமேஸ்வர குருக்களின் தந்தையார் சின்னத்துரைக் குருக்கள், அவர் மைத்துனர் சொர்ணலிங்கக் குருக்கள் போன்றோர் இத்தலத்தைப் போற்றிப் பாதுகாத்து வந்தனர். காலப்போக்கில் பின்னைய காலங்களில் கோவில் திருப்பணிகள் ஒழுங்காக நடைபெறாமையால் கட்டடங்கள் அழிவுற்று புனருத்தாரணம் செய்யவேண்டிய நிலை ஏற்பட்டது.

தேவி பராசக்திக்குப் புதியதோர் கோயில் அமைக்க இவ்வூர் மக்கள் திடங்கொண்டு, இவ்வூர்த் தோன்றலும் யாழ். பிரபல வர்த்தகருமாகிய காலஞ்சென்ற திரு. சி. செல்லத்துரை அவர்களைத் தலைவராகக் கொண்ட திருப்பணிச் சபை ஒன்றைத் தெரிவுசெய்து செயற்படத் தொடங்கினர். திரைகடல் ஓடியும் திரவியந் தேடும் திறமை கொண்ட இவ்வூர் மக்கள் தாங்கள் எங்கிருந்தாலும் அம்பாள் திருப்பணிக்கு அள்ளி அள்ளி வழங்கினர். தமது அந்திய காலத்தில் அம்பாளுக்காக அல்லும் பகலும் அயராது உழைத்த தலைவர் திடீரெனக் காலஞ்சென்றபோதிலும், தபால் அதிபர் திரு. சோ. நாகரெத்தினம் அவர்கள் அக்கடமையைத் தானேற்று அயராது உழைத்து வந்தார். இவர் தலைமையில் இவ்வூர் அன்பர்களினதும், அடியார்களினதும் பொருளுதவி கொண்டு எழுந்து நிற்பதுதான் இன்றைய புதிய கோயில். அருள்மிகு துர்க்காதேவி அம்பாளுக்கும், விநாயகர், சுப்பிரமணியர், வைரவர் ஆதியாம் பெருமான்களுக்கும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும், புதுப்பித்துக் கட்டிய தனித்தனி விமானங்களும், சிற்பங்களும் புதுப்பொலிவுடன் காட்சி தருகின்றன. இத்துடன் அன்பர்கள் பொருளுதவியால் மூலஸ்தானம், அர்த்த மண்டபம், மகா மண்டபம், தரிசன மண்டபம், யாகசாலை, சுற்று மதில் ஆகியனவும் புதுப்பித்து திருப்பணி நிறைவேற்றப்பட்டுள்ளது.

இன்று மகா கும்பாபிஷேகம் நடைபெறவுள்ளதால் அம்பாள் அடியார்கள் அன்னையைத் துதித்து அருள்பெறுவார்களாக.

சி. பாலசிங்கம்,
(ஆசிரியர், வைத்தீஸ்வர வித்தியாலயம் யாழ்ப்பாணம்)

"நின்று மிருந்துங் கிடந்தும் நடந்தும் நினைப்பதுன்னை
என்றும் வணங்குவ துன்மலர்த் தாளெழு தாமறையின்
ஒன்று மரும் பொரு ளேயரு ளேயுமை யேயிமயத் (து)
அன்றும் பிறந்தவ ளேயழி யாமுத்தி ஆனந்தமே"
— அபிராமியந்தாதி

## சக்தியின் தனிப் பெருமை

சக்தி என்பது வல்லமை. சக்தியானது நீருக்குக்குளிர்ச்சியும் அக்கினிக்குச் சூடும் போல சிவபிரானோடு பிரிப்பின்றி நிற்பதாகும்.

சூரியன் உலகிலுள்ள புறவிருளை நீக்கி ஒளியை உண்டாக்குவது போல சிவபெருமான் திருவருளால் ஆன்மாக்களது மயக்கத்தை நீக்கி, அனுக்கிரகஞ் செய்வர். சக்தியே உலகிற்குக் காரணம். சக்தியின்றேல்யாவுமின்று. திருவருளே சிவபெருமானுக்குச் சக்தியாகும். அவ்வருட்குணமாகிய சக்தியின்றிச் சிவம் இல்லை. சிவத்தை விட்டுச் சக்தி நீங்குவதில்லை. சக்தியின் வடிவம் ஞானமேயாகும். அதுவே பராசக்தி எனப்படும்.

தேவி அம்சங்களைப்பற்றி வேறு பல கொள்கைகளும் உண்டு. அவற்றுள் முக்கியமான கொள்கைகளைத் திருப்பாராய்த்துறையில் தபோவனம் வைத்து நடாத்திவரும் சுவாமி சித்பவானந்தர் அவர்கள் "சக்தி தத்துவம்" எனும் நூலில் கூறியுள்ளார். அதனை இங்கு குறிப்பிடுதல் இயல்புடையதாகும்.

"வேந்தன் முதல் வேலையாள் வரையில் உள்ள காரியஸ்தர் அனைவரும் அடங்கியது அரசாங்கம். ஒவ்வொரு உத்தியோகத்தவனுக்கும் பிரத்தியேகமான பிரவிருத்தி உண்டு. அம்முறையில் அம்பாள் அனேக அம்சங்களை உடையவள். யார் யார் எந்த வைபவத்தை விசேஷமாகப் பெற விரும்புகின்றனரோ அதற்கேற்ற தேவியம்சத்தைப் பெரிதும் போற்றி வணங்குகின்றனர். எங்கும் நிறைபொருளாகக் கருதப்படும்போது அவளுக்குப் பூரணி என்றும் பராசக்தி என்றும், ராஜராஜேஸ்வரி என்றும், மூலப்பிரகிருதி என்றும் பெயர். முத்தொழில்களைச் செய்யுமிடத்து பிராம்மணி வைஷ்ணவி, ருத்ராணி என்று அவள் பேர் படைக்கிறாள். சகுண பிரம்மம் அல்லது ஈசுவரனுக்கு ஒப்பாகும் போது அவளுக்குத் துர்க்கை என்னும் திருநாமம் வருகிறது. கால சொரூபிணியாகக் கருதப்படும் போது அவள் காளியாகின்றாள். வித்தையின் வடிவமெடுக்கும் போது அம்பாளுக்கு சரஸ்வதி என்றும், தனதானிய வடிவெடுக்கும் போது லக்ஷ்மி என்றும் பெயர். ஞானத்தை ஆதரிக்கும் போது மகா தேவியானவள் ஜகதாத்திரியாகவும் பவதாரணியாகவும் பாராட்டப்படுகின்றாள்."

வி. எஸ். பி.

★

ஆதியாஞ் சிவனுமவன் சோதியான சக்தியுந்தான்
அங்குமிங்கு மெங்கு முளவாகும் - ஒன்றே
யாகினு லுலகனைத்தும் சாகும் - அவை
யன்றி யோர் பொருளுமில்லை அன்றியொன்று மில்லையிதை
ஆய்ந்திடில் துயரமெல்லாம் போகும் - இந்த
அறிவுதான் பரம ஞான மாகும்
— பாரதியார்


இருப்பிட்டி துர்க்கை அம்மன் அருள்
அனைவருக்கும் கிடைக்க
இறைஞ்சுகின்றோம்

கே. கே. வி. யாழ்ப்பாணம்
நகை மாளிகை
82/4, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

பிரதீபா ஜுவல்லர்ஸ்
307, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

ஜெயச்சித்ரா ஜுவல்லறி
177/5, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

இந்திரா ஜுவல்லறி
183, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

★ தீபா ஜுவல்லறி ★
177, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

கபிலேஸ் ஜுவல்லர்ஸ்
280, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

அம்பிகா ஜுவல்ஸ்
கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

★ சிவநாதன்ஸ் ★
159, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

பொ. அம்பலவாணர்
நகை மாளிகை
119, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

வை. ஜி. மெடிக்கல்ஸ்
520, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

நித்தியா ஜுவல்லர்ஸ்
177/4, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

★ ராணி ஜுவல்லர்ஸ் ★
63, கன்னாதிட்டி (R. C. பில்டிங்)
யாழ்ப்பாணம்.

இருப்பிட்டி துர்க்கை அம்மன் அருள்
அனைவருக்கும் கிடைக்க
இறைஞ்சுகின்றோம்

★ மீண்டும் பழைய இடத்தில் சேவை ★
சின்னத்துரை அன் பிறதர்
39, கே. கே. எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

★ கோபால் அன் சன்ஸ் ★
23, கே. கே. எஸ் றோட்,
யாழ்ப்பாணம்.

K. கிருபாகரன்
42, செட்டியார் வீதி,
யாழ்ப்பாணம்.

★ டிப் டோப் ★
சுப்ப மாக்கற்
358, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

சிவசண்முகராஜா அன் கோ
45, 4ஆம் குறுக்குத் தெரு,
கொழும்பு - 11.

★ கௌரி றேடர்ஸ் ★
22 கே. கே. எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

★ சன்றைஸ் றேடர்ஸ் ★
6, கச்சாய் வீதி,
சாவகச்சேரி.

★ ஈஸ்வரி ஸ்ரோர்ஸ் ★
304, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

மயூதரன் அன் கோ
41, கே. கே. எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

பிள்ளையார் அன் கோ
104, கண்டி வீதி,
சாவகச்சேரி.

திலகா ஜுவல்லர்ஸ்
240, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ போலந்து

# கம்யூனிஸ்ட் கட்சி மீது சொலிடாரிட்டி கண்டனம்

வார்சோ, செப். 6

அரசு நடத்துவது எப்படி என்று புத்திமதி கூற வேண்டாம் என்று போலந்து கம்யூனிஸ்ட் கட்சியை சொலிடாரிட்டித் தொழிற் சங்கத் தலைவர் லெச்வலேசா எச்சரித்திருக்கிறார்.

சொலிடாரிட்டி அமைத்துள்ள கூட்டணி அரசில் கம்யூனிஸ்ட் கட்சிக்கு கொடுக்கப்படவேண்டிய அமைச்சர்கள் எண்ணிக்கை பற்றி கம்யூனிஸ்ட் தலைமைப்பீடம் கோரியதை திரு வலேசா எதிர்த்தார்.

சீர்திருத்தத்தில் நாட்டம் கொண்ட எவரும் எங்கள் அமைச்சரவையில் இடம்பெறுவார். அவர் எந்தக் கட்சியைச் சேர்ந்தவராக இருப்பினும் கவலையில்லை — இப்படி திரு. வலேசா சொன்னார். (எ)

# ஓஸோன் படலம் பாதிப்பு; சர்வதேச மாநாட்டில் ஆய்வு!

நைரோபி, செப் 6

பூமியை சூரிய ஒளி நேராகத் தாக்காமல் பாதுகாக்கும் ஓஸோன் படலம் அழிந்து போவதை எப்படித் தடுப்பது என்பதை ஆராயும் சர்வதேச மாநாடு நைரோபியில் நடந்தது.

வளிமண்டலத்தில் உள்ள இந்த ஓஸோன் படலத்தின் ஊடாக சூரிய ஒளி பூமியை வந்தடைகின்றது.

நச்சு வாயுக்கள் வாயு மண்டலத்தை அடைவதால் இந்த ஓஸோன் படலம் அழிந்து போகின்றது.

இதைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கும் திட்டம் ஒன்று 400 கோடி டாலர் செலவில் கட்டம் கட்டமாக 10 ஆண்டுகளில் சமூல் நடத்தப்பட வேண்டும் —

இப்படி இந்த மாநாட்டில் வளர்ச்சியடைந்த நாடுகள் முன்வைத்தன.

இத்திட்டத்திற்கு சகல நாடுகளும் உதவ வேண்டும் என்று வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

மாநாட்டில் கலந்து கொண்ட மூன்றாம் உலக நாடுகளின் பிரதிநிதிகள், இதற்கு உதவ முடியாது என்று அறிவித்தனர்.

'ஓஸோன் படலம் அழிந்து போவதற்கு மூன்றும் உலக நாடுகள் பொறுப்பு ஏற்க முடியாது. வளர்ச்சியடைந்த நாடுகள் தான் இதற்குக் காரணம். ஆகவே ஓஸோன் படலம் அழிந்து போவதால் ஏற்படும் பாதிப்பை சமாளிக்க மூன்றும் உலக நாடுகளுக்கு நிதி மற்றும் தொழில் நுட்ப உதவிகளை வளர்ச்சியடைந்த நாடுகளே கொடுக்க வேண்டும்' — இப்படி இந்தியப் பிரதிநிதி மாதவ சர்மா தெரிவித்தார். (எ)

# காணாமற்போன விமானம் நடுக்காட்டில் கண்டுபிடிப்பு!

ரியோடிஜெனரோ, செப் 6

கடந்த ஞாயிறு இரவு 54 பேருடன் காணாமற்போன பிரேஸில் நாட்டு விமானம் ஒன்று நேற்று அமேசன் காட்டின் நடுவில் தரையிறங்கியது கண்டுபிடிக்கப்பட்டது.

அடர்ந்த காட்டின் மத்தியில் வெட்ட வெளியாகக் காட்சியளித்த மேய்ச்சல் தரையில் விமானி விமானத்தை அவசரமாகத் தரையிறக்கினார்.

விமானத்தில் ஏற்பட்ட தொழில்நுட்பக் கோளாறே இதற்குக் காரணம் என்று அறிவிக்கப்பட்டது.

விமானத்தில் இருந்த 54 பேரில் 8 பேர் உயிரிழந்தனர். ஏனையோர் ஆறு விமானச் சிப்பந்திகள் உட்பட, காயங்களுடன் உயிர் தப்பினர்.

தப்பியவர்களில் ஒருவர் பல மைல்கள் காட்டின் ஊடாக கிராமம் ஒன்றுக்கு வந்து கொடுத்த வானொலித் தகவலைத் தொடர்ந்தே விமானத்தின் கதி தெரியவந்தது.

காயமடைந்தவர்களை மீட்க பிரேஸில் உடனே நான்கு ஹெலிக்கொப்டர்களை அந்த இடத்துக்கு அனுப்பி வைத்தது. (எ)

# போதை பாவனைக்கு எதிராக போர் நடத்த அமெரிக்க அதிபர் முடிவு

## 800 கோடி டாலர் செலவில் புதிய திட்டம்

வாஷிங்டன், செப். 6

போதைவஸ்துக் கடத்தல், பாவனைக்கு எதிரான யுத்தத்தை நடத்த அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ்புஷ் புதிய திட்டம் ஒன்றை தயாரித்துள்ளார்.

800 கோடி டாலர் செலவில் இத்திட்டம் செயற்படுத்தப்படும் என்று ஜனாதிபதி புஷ் நேற்று டெலிவிஷனில் பேசுகையில் தெரிவித்தார்.

போதைவஸ்துக் கடத்தலைத் தடுப்பது சம்பந்தமான சட்டம் ஒழுங்கு நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்துவது.

போதைப் பாவனையில் ஈடுபடுபவர்களைக் கண்டுபிடித்து தண்டிப்பது ஆகியனவற்றைத் தீவிரப்படுத்துவது என்று அமெரிக்க அரசு தீர்மானித்து உள்ளது.

அமெரிக்காவில் போதைவஸ்து பாவனையில் இளைஞர்கள் அதிக அளவில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதனால் அமெரிக்க நகரங்கள் இன்று போர்க்களங்களாக மாறி வருகின்றன —

இப்படி அதிபர் ஜோர்ஜ்புஷ் தெரிவித்தார். (எ)

# ஈரானுடன் பேச்சு நடத்த அமெரிக்க அரசு முயற்சி!

நிக்கோஸியா, செப் 6

அரசியல் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கு அமெரிக்கா முயற்சித்து வருவதாக ஈரான் அறிவித்தது.

இது சம்பந்தமாக வெள்ளை மாளிகை செய்தி ஒன்றை தெஹ்ரான் அரசுக்கு அனுப்பி வைத்துள்ளது.

செய்திக்குப் பதிலை ஈரான் இன்னமும் அனுப்பவில்லை என்று முதலாவது பிரதி வெளியுறவு அமைச்சர் அலி முகமது பெஷாரதி தெரிவித்தார்.

இத்தகவலை தெஹ்ரான் டைம்ஸ் வெளியிட்டது. (எ)

## பின்லாந்தில் அரசியல் தஞ்சம்

ஹெல்சிங்கி, செப். 6

இரண்டு சீன விஞ்ஞானிகள் பின்லாந்து நாட்டில் அரசியல் தஞ்சம் கோரியிருக்கின்றனர். ஒருவர் இரசாயனத்துறைப் பேராசிரியர். மற்றவர் இவரின் மனைவி. இவரும் பொறியியல் துறைப்பேராசிரியையாக பணி புரிந்து வந்தார். (எ)

## ராஜீவ் சந்திப்பு

இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி நேற்றுபெல்கிறேட்டில் பல நாடுகளின் தலைவர்களைச் சந்தித்துப் பேச்சுக்கள் நடத்தினார்.

அணிசேரா இயக்க நாடுகளின் உச்சி மாநாடு தற்போது பெல்கிறேடில் நடைபெற்றுக் கொண்டிருப்பது தெரிந்ததே. (எ)

## 40 வருடச் சிறைத்தண்டனை

கார்டூம், செப். 6

கவிழ்க்கப்பட்ட சூடான் அரசின் முக்கிய தலைவர் ஒருவருக்கு ராணுவ நீதிமன்றம் 40 வருட காலச் சிறைத்தண்டனை விதித்தது.

பதவியில் இருந்த போது பல ஊழல்களில் ஈடுபட்டதாக இதிரிஸ் - அல் - பன்னா என்ற பெயருடைய இந்த அமைச்சர் மீது குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது (எ)

## இளவரசர் குற்றச்சாட்டு

லண்டன், செப். 6

நவீன கட்டடக்கலைக்கு எதிராக பிரிட்டனின் முடிக்குரிய இளவரசர் சாள்ஸ் போர்க்கொடி எழுப்பி இருக்கிறார்.

பிரிட்டிஷ் நிபுணர்கள் நவீன கட்டடக்கலை கட்டும் பாணியை அறிமுகப்படுத்தி வருவதால் நாட்டின் அழகைக் கெடுத்து வருகிறார்கள் என்று இளவரசர் குற்றஞ்சாட்டியுள்ளார். (எ)

● சீன அரசியல்;

# கலாசார அமைச்சர் வாங் பதவி நீக்கம் செய்யப்பட்டார்

பீகிங், செப் 6

சீனாவின் கலாசார அமைச்சர் வாங் மெஸ் பதவி நீக்கம் செய்யப்பட்டார்.

பதவி நீக்கம் செய்யப்பட்ட கம்யூனிஸ்ட் தலைவர் ஷா ஓ ஷியாங்கின் நெருங்கிய சகா இவர்.

கடந்த ஜூனில் சீன மாணவர் கிளர்ச்சி மக்கள் விடுதலை இராணுவத்தால் நசுக்கப்பட்ட பின்னர் திரு வாங் பொது வைபவங்களில் காணப்படவில்லை. (எ)

# அமெரிக்கப் படம் திரையிட தென் கொரியாவில் எதிர்ப்பு

சோல்' செப் 6

தென் கொரியாவில் அமெரிக்கத் திரைப்படங்கள் திரையிடப்படுவதற்கு எதிராக கிளர்ச்சி நடைபெற்று வருகின்றது.

இதன் ஒரு கட்டமாக தென் கொரியப்படத் தயாரிப்பாளர்கள் இருவர் அமெரிக்க படம் ஒன்றை திரையிட்ட தியேட்டருக்குள் நச்சுப்பாம்புகளை கொண்டுபோய் விட்டனர் என்று குற்றஞ் சாட்டப்பட்டுள்ளனர்.

பாம்பாட்டி ஒருவருக்கு இதற்காக 10 ஆயிரம் டொலர் பணம் வழங்கப்பட்டது; என்றும் அதைத தொடர்ந்து பாம்பாட்டி பதினைந்து நச்சுப்பாம்புகளைப் பிடித்துக் கொண்டு போய் தியேட்டருக்குள் விட்டார் என்றும் பொலீஸார் தெரிவித்தனர். (எ)

## போலந்தில் சிகரெட் விலை உயர்வு

வார்சோ, செப், 6

போலந்து அரசு சிகரெட் விலையை உயர்த்தியது.

உற்பத்திச் செலவு அதிகரித்ததன் காரணமாகவே சிகரெட் விலை 75 சதவீதத்தால் உயர்த்தப்படுகின்றது என்று அரசு செய்தி நிறுவனம் தெரிவித்தது. (எ)

கார் ஓட்டும் எரிவாயு:

# வீட்டில் வைத்து நிரப்பும் முறை அவுஸ்திரேலியாவில் அறிமுகம்!

எரிவாயுவைக் கொண்டு கார்களை ஓட்ட இயலும் என்பது புதிய விஷயமல்ல.

ஆனால் எரிவாயுவைக் காரில் நிரப்பிக் கொள்ள எரிவாயு விநியோக நிலையத்துக்குச் செல்லாமல் வீட்டிலேயே நிரப்பிக்கொள்வது என்பது புதிய விஷயமாகும்.

அவுஸ்திரேலியாவில் எரிவாயு நிறைபக் கிடைக்கும் இடங்களில் குழாய் மூலம் வீட்டுக்கு எரிவாயு விநியோகம் செய்யும் ஏற்பாடு உள்ளது.

எனவே காருக்கு எரிவாயு தேவை என்றால் வீட்டிலேயே நிரப்பிக்கொள்ள முடியும்.

இதற்கான கருவி ஒன்றை உருவாக்கியுள்ளதாக அடிலெயிட் நகரில் தெற்கு அவுஸ்திரேலிய எரிவாயு கம்பெனியின் மூத்த வேதியியலாளரும் என்ஜினியருமான ஆலிவ் கிளார்க் (Ollie Clark) கூறினார்.

15 ஆண்டுகால ஆராய்ச்சியின் பலனாக இது உருவாக்கப்பட்டதாக அவர் குறிப்பிட்டார்.

கார்களில் எரிவாயுவைப் பயன்படுத்தினால் பெட்ரோலுக்கு ஆகக்கூடிய செலவில் 30 சதவீதம் குறைவு.

சமையல் வாயுவிற்கு (Liquified petrolium Gas) ஆகும் செலவில் பாதிதான் ஆகிறது என்று தெரிவிக்கப்பட்டது.

அவுஸ்திரேலியாவில் சமையல் வாயுவை (LPG) பயன்படுத்தி ஓடும் கார்களும் உள்ளன.

LPG சிலிண்டர்களைப் போலவே எரிவாயு அடங்கிய சிலிண்டர்களைக் காரின் பின்புறத்தில் வைத்துக்கொள்ள முடியும்.

ஆனால் இதில் ஒரு வித்தியாசம் உள்ளது. LPG சிலிண்டரில் வாயுவானது திரவ நிலையில் உள்ளது.

காரில் LPG ஐப் பயன்படுத்தும் போது என்ஜினை அடைவதற்கு முன்னர் அந்த வாயுவை சூடேற்ற வேண்டியுள்ளது.

ஆனால், எரி வாயுவை அப்படிச் சூடேற்றத் தேவையில்லை.

எனவே, LPG கார்களுடன் ஒப்பிடுகையில் எரிவாயு கார் விரைவில் "ஸ்டாரட்" ஆகும்.

எரிவாயு சிலிண்டரில் வாயு திரவ வடிவில் இருப்பதில்லை யென்றும் கிளார்க் கூறினார்.

வீட்டில் சிலிண்டரில் எரிவாயுவை நிரப்பிக் கொள்வதற்காக தாங்கள் உருவாக்கியுள்ள சாதனம் பற்றி அவர் கூறுகையில் கொம்ப்ரெஸ்ஸர் தான் இதில் மைய உறுப்பாகும் என்றார்.

வீட்டிலுள்ள எரிவாயு விநியோகக்குழாயுடன் இச்சாதனத்தைக் கொண்டு சிலிண்டருடன் இணைப்பு அளித்தால் சிலிண்டரில் எரிவாயு நிரம்பும்.

எனினும், இதில் ஒரு சிறு பிரச்சினை உள்ளது.

அதாவது, ஒரு தடவை சிலிண்டரை நிரப்ப சுமார் 4 மணி நேரம் ஆகும்.

எனவே, முதல் நாள் இரவில் இணைப்புச் செய்து விட்டால் மாறுநாள் காலையில் சிலிண்டர் நிரம்பிவிடும்.

எனினும், விரைவிலேயே சேவை நிலையங்களில் பயன்படுத்துவதற்கென மேற்படி சாதனத்தின் வர்த்தக மாதிரியை நிறுவ முடியும் என எதிர்பார்ப்பதாகவும், அதைக் கொண்டு சிலிண்டரில் சுமார் 3 நிமிஷங்களில் எரிவாயுவை நிரப்பிவிட முடியும் என்றும் கிளார்க் தெரிவித்தார். (எ-4)





தாயின் மென்மைப பராமரிப்பைத் தரும்

பேபி ஷெரமி-குழந்தையுடன் உங்கள் அன்பைப் பகிர்ந்து கொள்ளச் சிறந்த வழி. மென்மைப் பரிவுடன் கூடிய அன்னையின் அன்பே குழந்தைச் செல்வத்தின் சொகுசையும் சுகத்தையும் இதமாகப் பேணுகிறது. தாயின் அதே மென்மைப் பராமரிப்பைச் சேய்க்கு வழங்குவது பேபி ஷெரமி மட்டுமே!

குழந்தையைப் பேணும் பொருள் வரிசை கொண்ட பேபி ஷெரமி, அதி நுண்மையும் அதி சிறப்பும் வாய்ந்த சேர்வம்சங்களுடன் ஒரு தாய் மட்டுமே வழங்கும் பக்குவத்துடனும் கவனத்துடனும் தயாரிக்கப்படுகிறது. பேபி ஷெரமி சிக்கனம் மிக்கதும் கூட.

கொலோன் 54 மி.லி.— 31/90
108 மி.லி.— 47/50
டால்க் — 15/90
கிறீம் — 34/90
சோப் — 8/50

அன்னையின் பரிவுக்கு உன்னதச் சின்னம் பேபி ஷெரமி

தரமான பொருள்களை வழங்கும் ஹேமாஸ்

D&D


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவலர் - சித்தங்கேணி

91 A/L கலை, வர்த்தக வகுப்புக்கள்
ஆரம்பமாகிவிட்டன.
எமது ஆசிரியர்குழு
திரு: கலாகரன், திரு. தேவா
திரு. கேசவன், திரு. சிறீகாந்தன்
திரு. இராஜேந்திரா,
திரு. அருள்நங்கை

# உதயன்

07 - 09 - 1989 வியாழக்கிழமை

நாவலர் = சித்தங்கேணி

O/L DAY CLASS
(பகல்நேர வகுப்புக்கள்)
காலை 8 மணி முதல் பி. ப. 1 மணிவரை
கணிதம் — திரு. U. குணம்
விஞ்ஞானம் — திரு. J. R. சூரி
ஏனைய சகல பாடங்களும்
நடைபெறுகின்றன.

மெதடிஸ் திருச்சபை 175ஆம் ஆண்டு விழா:

## நாளை முதல் விசேஷ நிகழ்ச்சிகள்

மெதடிஸ்த் திருச்சபையின் 175 ஆம் ஆண்டு நிறைவையொட்டி நாளை 8 ஆம் திகதி முதல் விசேஷ நிகழ்ச்சிகள் ஒழுங்குசெய்யப்பட்டுள்ளன.

யாழ். சென் பீற்றஸ் தேவாலயத்தில் நாளை முதல் மூன்று தினங்களுக்கு சுவிசேஷக் கூட்டங்கள் நடைபெறும்.

தினமும் மாலை 3. 30 மணி முதல் 5 30 மணிவரை நடைபெறும்: இக் கூட்டங்களில் ஐரிஷ் நாட்டைச் சேர்ந்த அருட் திரு ஜோர்ஜ் ஈ குட் கலந்து கொண்டு உரை நிகழ்த்துவார்.

10 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 00 மணி முதல் 11 00 மணிவரை சகலகிறிஸ்தவதிருச்சபைக் குருமாரும் திருச்சபை அதிட்சக தலைவர்களும் பங்குபற்றும் கூட்டம் நடைபெறும்

11 ஆம் திகதி ஞயிற்றுக்கிழமை காலை 10. 00 மணிக்கு நடைபெறும் பொதுக் கூட்டத்துக்கு மெதடிஸ் திருச்சபையின் தலைவர் வணக்கத்துக்குரிய ஹறோல்ட் பெர்ணாண்டோ தலைமை வகிப்பார்.

இதில் மெதடிஸ் திருச்சபையின் தலைமைப் பீடத்துக்கு புதிதாகத் தெரிவாகி இருக்கும் வணக்கத்துக்குரிய கலாநிதி கிளிஸி முத்தையா விசேஷ பேச்சாளராகக் கலந்து கொள்வார்.

யாழ் குடாநாட்டின் திருச்சபைகளின் தலைவர்கள் இக் கூட்டத்தில் கலந்து கொண்டு அருளுரை நிகழ்த்துவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (இ)

## நடுக்கடலில் தத்தளித்த தந்தையும் மகனும் மீட்பு

தாளையடி, செப் 7

படகில் இயந்திரக் கோளாறு ஏற்பட்டதினால் நான்கு நாட்களாக கடலில் தத்தளித்த தந்தையையும் மகனையும் வேறு மீனவர்கள் கரைக்கு கொண்டுவந்து சேர்த்தார்கள்.

உடுத்துறையைச் சேர்ந்த வி. சிவசாமியும் அவரது மகன் ஆனந்தசங்கனுமே நான்கு நாட்களாக கரை திரும்ப முடியாமல் கடலில் தத்தளித்தவர்கள் ஆவர்.

நான்கு நாட்களாக நீர் உணவு என்பன இல்லாது இவர்கள் மிகக் களைப்படைந்து காணப்பட்டனர். [ஒ-144]

## எம். பிக்களின் வீடுகளுக்கு பாதுகாப்பு மின்விளக்குகள்!

கொழும்பு, செப். 7

நாடாளுமன்ற உறுப்பினர்களின் வீடுகளுக்கு சக்தி வாய்ந்த பாதுகாப்பு மின் விளக்குகளைப் பொருத்த அரசு தீர்மானித்திருக்கிறது

இத்திட்டத்தின் கீழ் 225 எம். பிக்களின் வீடுகளுக்குப் பிரகாசம் கூடிய பாதுகாப்பு விளக்குகள் பொருத்தப்படும்.

இதற்கான செலவுகளை அரசே பொறுப்பேற்கும்: தேவையான நிதியைப் பெறும் இரண்டு குறை நிரப்பும் பிரேரணைகள் அமைச்சர் பெஸ்டஸ் பெரேராவால் நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் சமர்ப்பிக்கப்பட்டது. (ஒ-எ)

### அரசியலமைப்பை--

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

முறைதான் இன்றைய வன்செயலுக்கான காரணம் என்று அபிப்பிராயப்படுவது எவ்வளவு முட்டாள்தனம்!

ஜனாதிபதி அரசு முறைக்கு திருத்தம் கொண்டு வருவது அல்லது அதை ஒழிப்பது என்பதை மக்கள் விருப்பமறிந்து செய்யலாம்.

—இப்படி அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. [ஒ-எ]

### காணாமற்போன..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வர அனுமதிக்க வேண்டும் என்று சட்டத்தரணிகள் சங்கத் தூதுக்குழு ஜனாதிபதியைக் கேட்டுக்கொண்டது-என்றார். (ஒ-எ)

## தெற்கில் 200 பேர் கைது; 2 பெண்கள் சுட்டுக் கொலை

கொழும்பு, செப்: 7

தென் பகுதியில் கடந்த 24 மணி நேரத்தில் பதினைந்து பேர் உயிரிழந்தனர். 45 தீவிரவாத சந்தேக நபர்கள் சரணடைந்தனர். 200 பேர் பாதுகாப்புப் படையினரால் கைது செய்யப்பட்டனர்.

அரசு அறிக்கை ஒன்றில் இத்தகவல்கள் வெளியிடப்பட்டன.

ஏனைய சம்பவங்கள் வருமாறு:- [illegible]

★ பாதுக்க பொலீஸ் பகுதியில் அங்கமன்பிட்டிய என்னுமிடத்தில் முகமூடி மனிதர்கள் இரண்டு பெண்களைச் சுட்டுக் கொன்றனர்.

அரசியல் காரணங்களுக்காக இக்கொலைகள் இடம்பெற்றன என்று பொலீஸார் தெரிவித்தனர்.

★ மொரவாக்க பொலீஸ் பகுதியில் அக்குரெல என்னும் இடத்தில் எரியுண்ட நிலையில் மூன்று சடலங்களைப் பாதுகாப்புப் படையினர் கண்டெடுத்தனர்.

## டிக்வெலயில் நால்வர் சுட்டுக்கொலை

கொழும்பு, செப். 7

மாத்தறை மாவட்டத்தில் டிக்வெல என்னுமிடத்தில் தப்பிச் செல்ல முயன்ற தீவிரவாத சந்தேகநபர்கள் எனக் கூறப்படும் நான்கு பேரை படையினர் சுட்டுக்கொன்றனர்.

ஆகஸ்ட் 28 முதல் செப்டம்பர் 6 வரை 237 பேர் தென் பகுதி வன்செயல்களில் உயிரிழந்தனர் என்று இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

## வல்வையில் தேடுதல்

வல்வெட்டித்துறை, செப் 7

வல்வெட்டித்துறைப் பகுதியில் நேற்று தேடுதல் மேற்கொள்ளப்பட்டது.

மாதாங்கோவிலடி, மருதடி, தீருவில் அம்மன் கோவிலடிப் பகுதி மற்றும் வல்வைச்சந்தி போன்ற இடங்கள் தீவிர சோதனைக்குள்ளாயின.

இதனால் போக்குவரத்தும் பாதிப்படைந்தது. (ஒ-160)

## மண்டானில் குண்டுச் சத்தம்

மண்டான் பகுதியில் நேற்று நண்பகலளவில் பெரிய குண்டு வெடிப்புச் சத்தம் ஒன்று கேட்டது. சேத விவரம் எதுவும் தெரியவரவில்லை. (ஒ-160)

### நெடுந்தீவில்-.

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

படகுச் சேவையும் நேற்று நடைபெறவில்லை:

தேடுதல் நடவடிக்கை நடைபெற்ற வேளை ஹெலிக்கொப்டர் ஒன்று வானத்தில் சுற்றிச்சுற்றி வட்டமிட்டதாகவும் கூறப்பட்டது: (ஒ-10)

பெல்கிறேட் சென்றுள்ள

## ரஞ்சனுக்கு விசேட தகவல் பிரேமா அனுப்பி வைத்தார்

நிதி அமைச்சின் செயலாளர் ஆர்: பாஸ்கரலிங்கம் அவசரமாக பெல்கிறேட் சென்றார்.

ஜனாதிபதி பிரேமதாஸாவின் செய்தி ஒன்றை பெல்கிறேட்டில் அணிசேரா இயக்க மாநாட்டில் கலந்து கொண்டுள்ள வெளியுறவு அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினவிடம் கையளிக்கவே திரு: பாஸ்கரலிங்கம் அனுப்பப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

சார்க் வெளியுறவு அமைச்சர்கள் மாநாட்டை வருகிற நவம்பரில் நடத்தும் சாத்தியக் கூறுகள் பற்றிய ஜனாதிபதி பிரேமதாஸாவின் செய்தியை திரு: பாஸ்கரலிங்கம் கொண்டு சென்றார் என்று பிந்திக் கிடைத்த தகவல்கள் தெரிவித்தன. (ஒ-எ)

## சர்வகட்சி மாநாடு குறித்து ஈ.ஜ.மு. பிரேமாவுடன் பேச்சு

யாழ்ப்பாணம், செப் 7

ஈழவர் ஜனநாயக முன்னணியின் உயர்மட்டக் குழு ஒன்று நேற்று முன்தினம் (செவ்வாய்க்கிழமை) ஜனாதிபதி திரு: ஆர். பிரேமதாசாவைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியது.

சுமார் இரண்டு மணித்தியாலங்கள் பேச்சுவார்த்தை நீடித்தது.

நடக்க இருக்கும் அனைத்துக் கட்சி மாநாடு குறித்துக் குழுவினர் ஜனாதிபதியுடன் விரிவாகப் பேச்சு நடத்தினர்.

வடக்கு - கிழக்கில் ஏற்பட்டுள்ள மின்சாரத் துண்டிப்பு விவகாரம் உட்பட இன்னும் பல விடயங்கள் பற்றியும் பேச்சுவார்த்தையின்போது ஆராயப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

ஜனாதிபதி பிரேமதாசாவைச் சந்தித்த குழுவில், ஈழவர் ஜனநாயக முன்னணியின் செயலாளர் திரு. வே. பாலகுமாரன் மற்றும் திரு. சங்கர்ராஜி, யாழ். மாவட்ட எம். பி. திரு. இ. பரராஜசிங்கம் ஆகியோர் அங்கம் வகித்தனர்.

இது இவ்வாறிருக்க, ஈழவர் ஜனநாயக முன்னணியின் நாடாளுமன்ற விவகாரக்குழு, அமைச்சர்கள் ஏ. சி. எஸ். ஹமீத், பெஸ்டஸ் பெரேரா மற்றும் எம். பிக்களான அத்தாவுட செனவிரத்ன, தினேஷ் குணவர்த்தன ஆகியோரையும் சந்தித்துப் பேசியது.

இந்தச் சந்திப்புக்களின் போது பூஸா மற்றும் போகம்பறை சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகள் பற்றிய விடயங்கள் குறித்தும் பேசப்பட்டது. [ஒ]

### அரசியல்- ...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ளர் என்று வெளி உலகுக்கு காட்டுவதன் மூலம் நெருக்கடிக்குள் சிக்கித் தவிக்கும் யு. என். பி அரசுக்கு முட்டு கொடுக்கும் முயற்சியே இதுவாகும்; இதற்காக தமது உறவினர்களையும் ஆதரவாளர்களையும் பயன்படுத்துவதோடு அப்பகுதியிலுள்ள சாதாரண மக்களையும் அகதிகளாகச் செல்லுமாறு மிரட்டி வருகின்றனர் — ஒரு குழுவினர்.

— இப்படி அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சுகாதாரத் தொழிலாளர்களுக்கு சீருடைகள் வழங்கவும் தயக்கம்

### தொழிற்சங்கப் பிரமுகர் உரை

யாழ்ப்பாணம், செப். 7

சுகாதாரத் தொழிலாளர்களுக்கு கடந்த ஐந்து வருடங்களாக வழங்கப்படும் வருடத்துக்கு மூன்று சோடி சீருடைகள் தொடர்ச்சியாக வழங்கப்படுவதில்லை; அதற்கு மாற்றாக எந்த வேதனமும் வழங்கப்படுவதில்லை; இது அவர்கள் போராடிப் பெற்ற உரிமையில் கைவைக்கும் செயலாகும்.

பொலிஸாரும், இராணுவத்தினரும் காக்கி உடை அணிவதால் தொழிலாளருக்கும் காக்கிச் சீருடை வழங்கினால் ஆள் மாறாட்டம் ஏற்பட்டுவிடுமென்று சாட்டுச் சொல்லி அரசு அதை வழங்காமல்விட்டுவிட்டது: அரசின் பேரினவாதப் போக்கு தமிழினத்தை அழித்தொழிக்கும் செயலாக மட்டும் மாறவில்லை; தொழிலாளர்கள் வென்றெடுத்த உரிமைகளைப் பறிக்கவும் அரசு இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டது.

ஈழத் தொழிற்சங்க சம்மேளனப்பிரமுகர் திரு: வீ. ஏ. கந்தசாமி சாவகச்சேரியில் நடைபெற்ற சுகாதாரத் தொழிலாளர்களின் கூட்டத்தில் பேசும்போது இவ்வாறு கூறினார்.

திரு. ந. பெரியான் கூட்டத்திற்குத் தலைமை வகித்தார்.

திரு. கந்தசாமி மேலும் கூறியதாவது:-

சாவகச்சேரியில் சுகாதாரத் தொழிலாளர்களுக்கு வீட்டு வசதி, மலசலகூட வசதி, மின்சார வசதி என்பன செய்து கொடுக்கப்பட்டுள்ளது: ஆனால் வவுனியா, திருமலை, மூதூர்ப் பகுதி சுகாதாரத் தொழிலாளர்களுக்கு வீட்டு வசதி, மின்சார வசதி, குடிதண்ணீர் வசதி, மலசலகூட வசதி செய்து கொடுக்கப்படாமையால் அவர்கள் பெரும் அல்லற்படுகிறார்கள்.

அதுமட்டுமன்றி அவர்கள் இந்திய வம்சாவழியினர் என்ற சாட்டைச் சொல்லி, அவர்களை நிரந்தரத் தொழிலாளர் ஆக்காமலும், பென்ஷன் திட்டத்தின் கீழ் கொண்டு வராமலும், பத்து வருடங்கள் வேலை செய்த தொழிலாளர்கள் கூட வேலை வாங்கப்படுகிறார்கள்,

வன்செயற் பாதிப்புக்காக அரசு எல்லா அரசாங்க ஊழியர்களுக்கும் இரண்டு வருட சம்பள முற்பணம் வழங்கியது. ஆனால் சுகாதாரத் தொழிலாளர்களுக்கு மட்டும் இது மறுக்கப்படுகிறது: ஆகவே இதுபோன்ற அநீதிகளுக்கு எதிராகப் போராட அனைத்து உள்ளூராட்சி தொழிலாளர்களும் தமிழ் மாநில உள்ளூராட்சி தொழிலாளர் சங்கத்தில் சேர்ந்து போராட முன்வரவேண்டும்" —என்றார்.

வவுனியா மாவட்ட ஈழத் தொழிற்சங்க சம்மேளனச் செயலாளர் திரு: என். எஸ், சிவக்கொழுந்து பேசும்பொழுது சொன்னதாவது:—

"இந்த நாட்டில் அனைத்து மக்களின் நல் வாழ்வுக்காகவும், நகரின் சுகாதாரத்தைப் பேணுவதற்காகவும், உழைத்து வரும் சுகாதாரத் தொழிலாளர்களை சமூகத்தில் ஒதுக்கி வைப்பதோ, அவர்களின் தொழில் காரணமாக உதாசீனப் படுத்துவதோ மனிதப் பண்பாட்டுக்கு அப்பாற்பட்ட செயலாகும்.

வவுனியாவில் சுகாதாரத் தொழிலாளர் அனேகமானோர் நிரந்தரத் தொழிலாளர்களாக ஆக்கப்படாமல், பத்து வருடங்களுக்கு மேலாக வேலை வாங்கப்படுகிறார்கள்: அவர்களைச் செய்யாத குற்றங்களுக்காகத் தண்டிப்பதும், வேலை செய்யவிடாமல் இடைநிறுத்துவதுமான அதிகாரிகளின் காட்டுமிராண்டித் தனமான செயல் அனைவராலும் கண்டிக்கப்படல் வேண்டும். -என்றார்.

### சூடுபட்டவர் ...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வர் நேற்று மரணமானார்.

இராமநாதபுரத்தைச் சேர்ந்த பொன்னம்பலம் ரவீந்திரநாதன் (வயது 30) என்ற இளைஞரே மரணமானவராவார்.

இவருடன் காயமடைந்த ஏனைய இருவரும் யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சைபெற்று வருகின்றனர்.

படையினரைக் கண்டு ஓடிய போதுபிரஸ்தாப மூவரும் துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்காகிக் காயமடைந்தனர் என்பது தெரிந்ததே. [ஒ-10]

### ஜீ. சி. ஈ.....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பட்டியல்கள் என்பன மாவட்ட கல்வித் திணைக்களங்களுக்கு வந்து சேர்ந்துவிடும் —

ஆனால் இம்முறை இதுவரை அவை எதுவும் வரவில்லை; ஆகவே பரீட்சைத் திகதி தள்ளிப் போடப்பட்டுவிட்டதாகவே கருத வேண்டியுள்ளது — என்று இங்கு கல்வித் திணைக்கள அதிகாரி ஒருவர் கருத்து வெளியிட்டார்.

பரீட்சை எப்போது நடக்கும் என்பது குறித்து அரசாங்கம் திட்டவட்டமாக அறிவிக்காததால் மாணவர் குழப்பமடைந்துள்ளனர் எனப் பெற்றோர் ஒருவர் கவலை தெரிவித்தார். (அ-9)

### பாடசாலைகளை.

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

களை வழமை நிலையில் மீண்டும் இயங்க வைக்க பாடசாலை அபிவிருத்திச்சபை பிரதிநிதிகள் அடங்கிய குழு ஒன்று தொடர்ந்தும் முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

இம்மாதம் 11ஆம் திகதி நடைபெறும் கூட்டத்தில் அரச அதிபர், அமைதிப் படை அதிகாரிகள் உட்பட அனைத்து தரப்பினரையும் கலந்துகொள்ளச் செய்ய பிரஸ்தாப குழு முயற்சித்து வருகிறது.

இந்தக்கூட்டத்தில் தற்போதைய நிலைமைகளை விளக்கி, பெற்றோர் மாணவர்களைப் பாடசாலைக்கு அனுப்பத் தயங்குவதற்கான சில காரணங்களை எடுத்துரைக்க உள்ளதாகவும், அதன்பின் தடங்கல்களைக் களைவதற்கு உறுதிமொழி கோர உள்ளதாகவும் அறியவருகிறது. (ஒ-119-9)

### தனியார்....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

செய்திருக்கிறது:

மக்களுக்குத் தேவையான பல பாவனைப் பொருள்களை விநியோகிக்கும் வர்த்தகத் துறைகள், உற்பத்தித் துறைகள், ஆஸ்பத்திரிகள் போன்ற தனியார் துறைகள் அத்தியாவசிய சேவைகளாகப் பிரகடனப்படுத்தப்படும் என்றும் —

அத்துறைகளில் பணிபுரிவோர் கடமைக்குச் செல்லாதவிடத்து கடுமையாகத் தண்டிக்க வகை செய்யப்படும் — என்றும் தெரியவந்தது.

இதற்கான விசேட அறிவித்தல் எந்நேரமும் வெளியிடப்படலாம். (அ-உ.)

## மரண அறிவித்தல்கள்

### பொன்னம்பலம் இரவீந்திரநாதன் [ரவி]

பொன்னம்பலம் சரஸ்வதி தம்பதிகளின் அன்பு மகன் இரவீந்திரநாதன் அகாலமரணமானார். இவர் நெடுந்தீவைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், இராமநாதபுரத்தை வசிப்பிடமாகக் கொண்டவரும் ஆவார். இவர் கலாவதியின் அன்புக் கணவரும், புனிதா, மோகனதாஸ் ஆகியோரின் அன்புத் தந்தையும், அட்சரநாதன் (சுவிஸ்), அதிஸ்டலட்சுமி, புஸ்பமாலா சூரியகலா, தேவரஞ்சினி, மோகன் (சுவிஸ்) தவரஞ்சினி, சத்தியபாமா, துஷ்யந்தினி ஆகியோரின் அன்புச் சகோதரரும்; அமிர்தலிங்கம், இரத்தினசிங்கம் (செல்லத்துரை ஆறு சந்தி) அருமை மைத்துனரும் ஆவார். அன்னாரின் பூதவுடல் 07 - 09 - 89 வியாழக்கிழமை இராமநாதபுர இல்லத்தில் இருந்து தகனக்கிரியைகளுக்காக இராமநாதபுரம் மயானத்திற்கு பி. ப. 4.00 மணிக்கு எடுத்துச் செல்லப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் இவ் அறிவித்தலை ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

488, 6 ஆம் சந்தி,
இராமநாதபுரம்
(2078)

### திரு. க. செல்வரெட்ணம்

புங்குடுதீவைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், மணல்தறை லேனில் வசித்தவருமாகிய திரு: கனகசபை செல்வரெட்ணம் (அதிபர் இருப்பிட்டி அமெரிக்க மிஷன் கலவன் பாடசாலை, முன்னாள் அதிபர் புங்குடுதீவு மகாவித்தியாலயம்) 05-09-89 அன்று சிவபதம் அடைந்து விட்டார்.

இவர் காலஞ்சென்ற கனகசபை நாகம்மாவின் அன்புப் புதல்வரும் அன்னபூரணியின் அன்புக் கணவரும் கௌசல்யா [சுவிஸ்லாந்து]. வத்சலா, சுரேந்திரன் [சுவிஸ்], மேகலா: சத்தியேந்திரன் [சுவிஸ்], சர்மிளா [வேம்படி மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம்] ஆகியோரின் அன்புத் தந்தையும் சந்தனராஜா [சுவிஸ்]வின் மாமனாரும் சஜித்திரா [சுவிஸ்]வின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 07-09-89 வியாழக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரின் இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு கோம்பயன்மணல் மயானத்தில் தகனக்கிரியைகள் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத் தருகின்றோம்.

நன்றி

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

44/3, மணல்தறை ஒழுங்கை,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்
[2114]

அளவெட்டி

### திருமதி. சுகிர்தமலர் (வேவி) பரநிருபசிங்கம் [சிங்கம் மாஸ்டர்]

காலஞ் சென்ற சேவையர் தம்பிராசா திருமதி செல்லம்மா ஆகியோரின் அன்புத் தலைமகளும், ஆசிரியர் பரநிருபசிங்கத்தின் பிரிய மனைவியும், காலஞ்சென்ற இறைகுமாரன், திருமதி அருணரவிதாசன் (U. K), திருமதி கிரிஜா யோகேந்திரராஜா (கெந்தலை), திருமதி Dr. ஜமுனா சிவகாந்தன் (கனடா), செல்வி நளினா B. sc (கிழக்குப் பல்கலைக்கழக அமைய உதவி விரிவுரையாளர்), செல்வன் பரசுதரன் (கனடா), ஆகியோரின் அன்பு அன்னையும், திருமதி இராசமலர் இலகுப்பிள்ளை (ஆசிரியை மட்டக்களப்பு), திருமதி நேசமலர் இராமநாதன் [U. K], சிவபாலன் (எஞ்சினியர் U. K), Dr உமைபாலன் (U K), குகபாலன் (U, K), திருமதி சுலோஜனா செந்திற்செல்வன் (U. K) ஆகியோரின் பெரியக்காவும், போஸ்ற்மாஸ்டர் பொன்னம்பலம் (கனடா), கந்தையா (A.G A; சாவகச்சேரி) ஆகியோரின் மருமகளும், திருமதி லட்சுமிப்பிள்ளை ஜெயரத்தினம் (சாவகச்சேரி) திருமதி அன்னப்பிள்ளை சதாசிவம் (நுணாவில்) ஆகியோரின் பெருமகளும், கலைவாணியின் அன்புப் பேர்த்தியுமான சுகிர்தமலர் 3 - 9 - 89 இல் அகால மரணமானார். இறுதிப்பயணம் அன்னாரின் வீட்டிலிருந்து இன்று பி. ப. 3.00 மணியளவில் ஆரம்பமாகும்.

தகவல்:
ச. பரநிருபசிங்கம்.

இறைவன் வீதி,
அளவெட்டி.
[2110]

### திரு. த. சின்னப்பா (சட்டத்தரணி)

கொட்டைக் காட்டைப் பிறப்பிடமாகவும், திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. த. சின்னப்பா 06-09-1989 அன்று காலமானார்; இவர் காலஞ்சென்ற மனோரஞ்சிதவல்லியின் அன்புக் கணவரும், டாக்டர் பரமேஸ்வரி (போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்) யோகராஜா (எஞ்சினியர் U.K) டாக்டர் சிவரஞ்சினி (U K) ஆகியோரின் அன்புத் தந்தையும், லதா (U.K) சிறீகாந்தன் (எஞ்ஜினியர் U.K) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரது பூதவுடல் 07-09-1989 இன்று காலை 10 மணிக்கு தகனக் கிரியைக்காக திருநெல்வேலி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்; இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சி. பரமேஸ்வரி

திருநெல்வேலி வடக்கு,
யாழ்ப்பாணம்.
[2118]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் [illegible] 203/1 இலக்கத்தில் [illegible] 07-09-1989இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org